ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

மலர் 2.

Vol. 2.

ரக்தாட்சி ௵ ஆவணி ௴ முதல்

குரோதன ௵ ஆடி ௴ வரை

August 1924 to July 1925.

PUBLISHED BY

THE "LAKSHMI" OFFICE

MADRAS.

1925

Copy Right]

[Price Rs. **3.**

ஓம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1925
MADRAS

லக்ஷ்மி துதி

சாரணர் புத்தர் முதலோரும்
போற்றத் தரணி யுண்ட
நாரணன் மார் பத் திருக்கின்ற
பாவை நளினக் கையே
காரணம் நன்மைக்குந் தீமைக்கும்
என்னக் கழற வல்லார்
பூரணஞான முற்ருேர்; மற்றையோர்
சிறு புந்தியரே.

———

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் உ. | குரோதனவூ ஆடிமீ 1925 ஜூலை | இதழ் கஉ.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	593
2.	பத்திரிகைப் பிரிவும்	595
3.	யாவன வணங்குதற் குரியன் ...	597
4.	பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள் ...	599
5.	சரித்திரப்பகுதி	600
6.	யசோதரன்	604
7.	லட்சுமி கடாட்சம் பெறவேண்டுமொருல்	611
8.	வீட்டுவேலை	614
9.	வியாதிக் கிருமிகள்	616
10.	ஸ்நானம்	619
11.	அறிவின் பயன் (சித்திரப்படங்களுடன்)...	628
12.	விநோதக் குறிப்புகள்	637
14.	பத்திராதிபர் குறிப்புகள்	642

சித்திரப்படம்.

காலஞ்சென்ற சுப்பிரமணிய சிவம்.

21035

அட்டவணை.

	பக்கங்கள்.
லக்ஷ்மி திதி	1,57,109,161,215, 275,327,379,431,483,539593,
நமது இரண்டாவ தாண்டு	2
மனிதனும் அழகும்	1
பெண்களின் உயர்வு	11
கதிர்காமம்	15
குதிரைகள் புலம்பல்	18
தீண்டாமை ஒழித்தலுக்குப் பண்டைய ஆதரவு	21
கைத் தொழில்	27
லீலாவதி	30,83,179
வியாதிகளின் காரணங்கள்	39
பராசக்தி	46
சிவஸ்தலங்கள்	47
நாடு நீங்கிய ஸ்ரீமூல பூபதி	49
மதிப்புரை	51,105,152,2ı0, 271,373,532,
விசேஷக் குறிப்புகள்	52,98,155, 204,375,417,419,479,534, 589,637
நீராட்டம்	58
அறிவின் பயன்	59,628
விவசாயம்	63
ஒரு சொற்பொழிவு	69
தேக வலுவைப் பெறுங்கள்	75
அப்பம் திருடின எலி	77
நன்றி மறவேல்	79
சுந்தர மூர்த்தி சுவாமிகள் சரித்திரம்	91,190,523
நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்துக்குச் சண்டையும்	95,143
திருத்தாலாட்டு	110
மேலோர் யாவர்?	111
ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்	116, 244, 293
சுகவழி எண்பது	123
தமிழும் தமிழரும்	126
தீபாவளி தடபுடல்	129
பூனைக் குட்டி	139
சித்திரப் பத்தி	141, 199, 259 314, 356, 399, 460
ராணிமீனாட்சி	147
நூல் சந்தா விற்கு ஆட்சேபம்	149
தமிழ் குருகுலம்	150
கோழி வளர்த்தல்	154
பாரத நாடு	162,216
திருக்குறள்	163
தமிழகத் தாருக்கு	165,452
பசி கிடத்தல்	169
அண்டங்காக்கையின் கண்டனக்கூற்று	171
நமது சிற்பம்	187
அவுரங்கசீபின் இளமை	195,233
சுகாதாரம்	202
பத்திராசிரியர் குறிப்புகள்	206, 261.370,422,476,533,584,642
வைத்தியக் குறிப்புகள்	211,322
16 சுகவழிகள்	212
இந்திய மாதர்கள்	217
வெண்பா நூற்கள்	221
கல்வியும் மதமும்	225
பால் உணவு	236,316,450
சூரிய வெளிச்சம்	240
டாக்டர் சுப்பிரமணிய்யர்	251
கலியாணமான ஆண், பெண் கவனிக்க வேண்டிய முறைகள்	256
தேசாபிமானிகள் படம்	264
அதிசயம்	265
குருவிப் பாட்டு	269
தேசமாதா தேவாரம்	276
ஸ்திரீகளின் நவீன இயக்கம்	277
அறிவின் பயன்	282
ஹிந்துமத சமுதாயமும் சாதிகளின் இயல்பும்	301
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்	305
மடங்களும் கோயில்களும்	308
ரவீந்திரநாத் டாகூர்	309
இந்தியாவின் சிறப்பு	320
பெண்ணுலகம்	321
தமிழ் மொழி வாழ்த்து	328
பெண்களின் நிலைமையும் கல்வியின் மேன்மையும்	329

அட்டவணை.

	பக்கங்கள்.
கடவுள்	335
கீழோர் யாவர்	338
ஹிந்துமதத்தின்மறுமலர்ச்சி	340
சுதேசி தர்மம்	345,394,504
சூரிய விஞ்ஞான ஆராய்ச்சி	351, 385
விடுதலை	358
நடையுடை பாவனை	362
தியாகத்தின் மேன்மை	364
புத்தபகவானின் ஜன்ம ஸ்தானம்	380
இந்தியமாதரும் முந்திய ஒழுக்கமும்	381
தமிழ் நாட்டின் தொன்மை	390
மஹாத்மா காந்தியின் வருகை வாழ்த்துப்பா	397
சித்திர சுந்தரி	401
வேத நெறி வளர்ச்சி	409
தயாநந்த ஸரஸ்வதி	416
பேரியன் பழத்தின் சக்தி'	425
ஸ்திரீ சிங்காரம்	426
ஊழின்வழி உயிர்	432
தமிழ் மொழி பேணல்	433
பெண்டிர் உரிமை நலம்	4·5
உண்மை தவறாத உத்தமன்	457
கைத்திறன்	458
யசோதரன்	463,511,556,604
பாரத மாதா	471
ஜயபேரிகை	484

	பக்கங்கள்.
சைவ சமயம்	485
திருக்குற்றாலம்	493
எவரை மணப்பது	496
சுவாசவாயு இயங்கும் வழிகளும் சுவாச உருப்புக்களும்	508
ராமலிங்க சுவாமிகள் கல்வி கற்ற வரலாறு	526
நாட்டு வணக்கம்	540
பஞ்சத்தை ஒழிப்போம்	541
ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர்	546
கந்தர் அந்தாதி	552
தலனீபேகம்	554
வியாதிக்கிருமிகள்	567,616
பண்டரி யாத்திரை	571
தேசபந்து தாசர் சரித்திரம்	573
ஜாதி	578
ஒரு கோடீஸ்வரனின் ரகசியம்	580
விவசாயத்தில் புதுமை	581
பத்திரிகைப் பிரியம்	595
யாவன் வணங்குதற்குரியன்	557
பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்	599
சரித்திரப் பகுதி	600
லக்ஷ்ன் கடாட்சம் பெற வேண்டுமானால்	611
வீட்டுவேலை	614
ஸ்நானம்	619

சித்திரப் படங்கள்.

1. திருவிதாங்கூர் மஹாராஜா
2. சென்னையில் மொஹரம் பண்டிகைக் கொண்டாட்டம்
3. பஞ்ச கங்கா கட்டம்
4. திருவிதாங்கூர் (மைனர்) மஹா ராஜா
5. காசிமாநகரம்
6. ஈ. வி. ராமசாமி நாயக்கர்
7. காசி விஸ்வேசர் மூலஸ்தானம்
8. துர்க்காதேவி
9. சார்நாத் அல்லது புத்தர் வசித்த இடம்
10. பத்மநாப ஸ்வாமி
11. குணபரன்
12. கயாவிலுள்ள புத்தகயா ஆலயம்
13. ஸ்ரீமதி பாண்டுரங்க ராவ், லேடி சதாசிவய்யர் ஸ்டான் போர்டு [அம்மையார்

அட்டவணை.

14. சென்னையில் காந்தி விஜயம்
15. அமிர்தாபுரம் கோயில்
16. லார்டு ராலின்ஸன்
17. உஸ்மான் சாஹேப்
18. தாத்தேரி பஜார்
19. ஸர். பி. தியாகராய செட்டியார்
20. காலஞ்சென்ற சுப்பிரமணிய சிவம்.

APPRECIATION

A FEW OUT OF MANY

H. E. VISCOUNT GOSCHEN, G. C. I. E., C. I. E., V. D., Governor of Madras, letter dated London 18th Mar. 1924.

"I beg to thank you for the good wishes and welcome you have offered me."

The Hon' Dewan Bahadur, T. N. Sivagnanam Pillai, B. A. Minister of Development, Government of Madras Dated 12th January 1924,

"...........…The Articles are varied and informing and written in a racy and crisp style which is sure to be appreciated by all lovers of our mother tongue.

Might I suggest the advisablity of devoting some space regularly to the development of the Industry of our Country in which I as Minister for Devolopment am greatly interested"

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப் படமாட்டா.

மானேஜர்.



உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது!

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3. தபாற்செலவு வேறு.!

சொற்ப காபிகளே கைவசமுள்ளது. முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

தேசமாதா தேவாரம்.

ஒட்டிப்பாடியது.

பண்-கொல்லி.

(தம்மையே புகழ்ந் திச்சை பேசினும். நிகர)

தன் மதிப்பிழந் திச்சைபேசி மெய் தளரக் கை குவித்தேங்கியே
புன்மையாளர் தம் மடியில் வீழினும் பூம்செல்வ மவர் கொடார்
எம்மை பாரதி சேவையே பெரிதென்று கொள்ளுமின் இனத்தீர்காள்
இம்மையே "சுயராஜ்ய"மாள்வதற் கியாது மையுற வில்லையே.

கைகள் கட்டியும் பல்லிழித்திரு கால் நடுங்கியும் கள்ளர்பால்
மெய்சிலிர்த்திடக் கெஞ்சினும் அவர் மேவும் ஆட்சி யளித்திடார்
ஐயமற்றிடப் பாரதிக்கு நீர் அடிமை செய்யுமின் அன்பர்காள் !
துய்யதாம் "சுயராஜ்ய" மாண்டிடத் தோன்றுவீர் தடையில்லையே.

எவள வாண்டுகள் உரிமை நீங்கிட ஏழ்மையாலுயி ரீகுவீர்?
இவள வாண்டுகள் அன்னைதுன்புறல் ஏற்குமோ புகழ் காக்குமோ?
தவளமேனியளான பாரதி தாள்கள் போற்றுமின் தமயன்மீர் !
அவளதாம் "சுயராஜ்ய" மாள்வதற் கியாதுமையுற வில்லையே.

"கண்ணன"ன்றவன் ஊது வேய்ங்குழல் "காந்தி"யென்றறிவீர்கள் நீர்
எண்ணி உங்களைக் கூவலுற்றன எய்துவீர் விறல் எய்துவான்;
புண்ணியம் புனை நாடு மீட்டிடில் புகழும் வீரமும் புனைதிரால்
அண்ணலாம் "சுயராஜ்யம்" ஆளவதற் கியாதுமையுற வில்லையே.

வெடிமருந்தொடு குண்டும் வாளும் விதிர்த்து வெம்பகை மேவினும்
பொடிபடப் பொருவீர்கள் நும்மமனப் "பொறுமையாம் படைப்புகழி
றல்
அடிமை வாழ்வினை எறிமின் பாரதி அருளின் மூழ்குமின் அன்பர்காள்!
படியின்நீர் "சுயராஜ்ய"மெய்திடப் பகரு மையுற வில்லையே.

பா. ஆதிமூர்த்தி.

வந்தே மாதரம்.

பத்திரிகைப் பிரியம்.

நாம் ஒவ்வொருவரும் எப்படித் தேசாபிமானம், சமயாபிமானம், பாஷாபிமானம்| முதலிய அபிமானங்களை உடையவர்களா யிருக்க வேண்டுமோ அவ்விதமே பத்திரிகாபிமானமும் கொண்டவர்களாயிருக்க வேண்டும். ஒரு நாடு முன்னேற்ற மடைவதற்குப் பத்திரிகைகளே முக்கிய சாதனமா யுள்ளன. அதனால் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பத்திரிகைகளை நாம் ஒவ்வொருவரும் ஆதரித்து வரவேண்டியது அவசியமா யிருக்கிறது. ஒரு நூலை வாசிப்பதால் ஒரே சங்கதியை வாசித்து அறிகிறோம். ஆனால் ஒரு பத்திரிகையைப் படிப்பதால் எத்தனையோ சங்கதிகளை அறிந்துகொள்வதுமன்றி நம் நாடு முன்னேற்ற மடைய நாம் என்னென்ன செய்யவேண்டுமென்பதை நன்றாய் அறிந்து கொள்ளலாம். பிற நாடுகளி லுள்ளவர்கள் எல்லாரும் பத்திரிகையைப் படித்து வருகின்றனர். யாசகர்கள் கூடப் பத்திரிகை வாசிக்கின்றன ரென்றால் வேறென்ன கூற வேண்டும்? இதனாலன்றோ மேல் நாடெங்கும் மக்கள் |முன்னேற்ற மடைந்திருக்கின்றனர்? ஜப்பான் தேசம் இதற்குப் போதிய சான்றாகு மன்றோ ?

நம் நாட்டாருக்கு இப்பொழுது பத்திரிகாபிமானம் பெருகிவருகிற தெனினும் இன்னும் பலருக்கு அது செய்கையில் வெளிப்படவில்லை. சிலர் பத்திரிகையை இகழ்கின்றனர். "அடே! பத்திரிகை என்பதெல்லாம் காசு பறிக்கிறயா பாரமடா? என்னத்தையோ அங்கே இங்கேயென்றுகண்ட படி புளுகி எழுதியனுப்புகிறார்கள். இதெல்லாம் வெறும் புளுகுகள். அந்தக் கடுதாசிக்கு ரெண்டொண்ணு கொடுப்பதை ரெண்டு மூணு நாளையச் செலவு ஒப்பேற்றி விடலாம்." என்று மூடத்தனமாகக் கூறிவிடுகின்றனர். சில ஆங்கிலம் படித்த கனவான்கள் தமிழ்ப் பத்திரிகைகளைக் கண்டால் மலத்தைக் கண்டொதுங்குவது போல விறண்டோடுகின்றனர். யாராவது ஒரு பத்திரி

கைக்குச் சந்தாதார ராகும் படி சொன்னால் "அதென்ன! தமிழ்ப் பேப்பரா? எனக்கு வேண்டாம் அது. தமிழ்ப்பேப்பர்களில் என்ன இண்டரஸ்ட் இருக்கிறது. அவைகள் "யூஸ்லெஸ் பேப்பர்கள்." என்று நா கூசாது பிதற்றுகின்றனர். ஐயகோ! தமிழ் நாட்டில் தமிழர் வயற்றிலே பிறந்து தமிழிலேயே வளர்ந்து தமிழிலேயே உண்டு, தமிழிலேயே—தமிழன்னையின் திருவருளினாலேயே வாழ்ந்து, ஆங்கிலம் படிக்கத் துவங்கிய வுடன் தமிழை வெறுக்கத் தொடங்கினால் அது "மாதா வயிறெரிய வாழா யொருநாளும்" என்றபடி, பெற்றதாய்க்குத் துரோகம் செய்ததுபோலும், அவளைப் புறக்கணித்து நடப்பது போலுமாகுமன்றோ? பெற்ற தாயை வெறுக்கிறவன் உலகத்தில் மக்கள் பிறவியாகக் கருதப்படுவானா?

சிலர் பத்திரிகை வாங்குதற்குப் பணம் இல்லையென்று குறை கூறுகின்றனர். இவர்களுக்குச் சுருட்டு, சிகரட், பீடி, காப்பி, டீ, கள், சாராயம் முதலிய மயக்கப் பொருள்களை வாங்குதற்கு மாத்திரம் எங்கிருந்து பணம் கிடைக்குமோ? ஒருவர் தமக்குச் சுருட்டுக்கு மாத்திரம் மாதம் நாலு ரூபாய் செலவழிவதாக எம்மிடம் கூறினார். ஒரு மாதத்திற்குக் குறைந்த தொகை மூன்று ரூபாயென வைத்துக் கொண்டாலும் ஒரு ஆண்டிற்கு முப்பத்தாறு ரூபா யாகிறது. இம் முப்பத்தாறு ரூபாயில் ஒரு ஆண்டுக்குப் பாதியோ, மூன்றில் ஒரு பங்கோ, நாலில் ஒரு பங்கோ பத்திரிகைகளுக்குச் செலவழித்து விட்டால் என்ன தலை போய் விடுமா? உண்மையில் குறைந்த சம்பாதிப்புள்ள சிலர் பத்திரிகைக்குச் செலவிடும் அளவுகூடத் தனவந்தர்கள் செலவழிப்பதைக் காணோம். இவ்விதம் நம் நாட்டில் பத்திரிகாபிமானிகள் இல்லாதிருப்பது பற்றி யன்றோ சில பத்திரிகைகள் குழந்தைப் பருவத்திலேயே தலை காட்ட முடியாமல் மடிந்து விடுகின்றன.

எனவே நாம் அனைவரும் இனிமேலாவது இருவர் மூவர் சேர்ந்தாவது ஒவ்வொரு பத்திரிகையை ஆதரித்து வரவேண்டும். இறைவன் திருவருளால் நம் நாடு முன்னேற்றமடையும்படி அனைவரும் அவனடி தொழுவோ மாக.

தமிழ்நாடு வாழ்க. அ. ச. அருணாசல ரெட்டியார்.

யாவன் வணங்குதற் குரியன்?

இருக்கு வேதம். மண்டலம் ௧௦ ; சூக்தம் ௧௨௧.
(மொழி பெயர்ப்பு)

ஸ்ரீமான் த. ராமகிருஷ்ணன் எழுதியது.

௧. யாவன் முழு முதற் சோதியாய் ஒளிப் பொருட்களைச் சிருட்டித்து, படைப்புக்கள் யாவற்றிற்கும் முன்னவனாகி, உலகங்கட்கு தனிப்பெருந் தலைவனா யிலங்குகின்றானோ ; அவன் இம்மண்ணுலகினையும் விண்ணுலகினையுந் தாங்கி நிற்கின்றான். அவ்வின்ப வடிவினனாகிய இறைவனை நாம் ஆன்மார்ப் பணமாக வணங்குதல் வேண்டும்.

௨. யாவன் ஆன்மசக்தியும் உடல் வன்மையும் அளிக்கின்றானோ ; யாரை அறிஞர் வழிபடுகின்றனரோ, எவன் பணியை மெய்யறிஞர் உணர்ந்தியற்று கின்றனரோ ; யாரை அணுகுவது வீட்டுப் பேற்றையும் அணுகாதிருப்பது மரணத்தையுந் தருகின்றதோ ; அவ்வன்பு வடிவினனாகிய இறைவனை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௩. யாவன் தந் நிகரிலா மகிமையால் இயங்குவன, உயிருடையன, இருகால், நான்குகால் படைத்தனவாகிய மக்கள், விலங்கு, பறவையாதி சீவர்களை ஆளுகின்றானோ ; யாவன் இவ்வுலகங்கட்கு ஒப்பற்ற தலைவனாய் விளங்குகின்றானோ ; அத்தகைய சுகவடிவினனாகிய இறைவனை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௪. யாவன் தன் இணையிலா ஆற்றலினால் பனிபடிந்த பருப்பதங்களையும் யாறுகளையுங் கடலையும் படைத்திருக்கின்றானோ ; யாவன் தனது தோள்வலியினால் இ நாற்றிசைகளையும் பிற திசைகளையும் புரக்கின்றானோ ; அத்தகைய ஆநந்த வடிவினனாகிய இறைவனை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௫. யாவன் பெருஞ் சோதியான ஞாயிறனைய உலகங்களையும், கட்டியான மண்ணுலகினையும், இடையறா வின்பந் துய்த்தற்குரிய ஒளியுலகினையும் படைத்திருக்கின்றானோ ; யாவன் பல்வகை யுலகங்களையும் அந்தரத்தியக்குகின்றானோ ; அக்கருணாநிதியாகிய இறைவனை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௬. யாவன் தன்னாணையால், இயங்குவதும் யாவற்றையுந் தாங்கி நிற்பதுமான கதிரவன் மண்டலத்தையும் பூமண்டலத்தையும் அவ்வவற்றி னியற்கையால் யாவற்றையும் பரிபாலிக்குமாறு ஏவுகின்றானோ; யாவனிடத்து ஞாயிறு உதயமாகி பேரொளி யெய்துகின்றதோ; அவனை மெய்யறிவர் யாண்டுங் காண்கின்றனர். அத்தகைய மங்கள வடிவினனாகிய இறைவனை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௭. யாவன் மிகப் பெரிய பிருதிவியாதி உலகங்களைப் படைத்து, யாவற்றிற்கும் மூலகாரணனாக விளங்கி; மண்ணிற் கடினமாகி, நீரில் நெகிழ்ந்து, நெருப்பில் சோதியாகி, வானுட் பரந்து, விசும்பில் நிறைந்து, யாவற்றுள்ளும் புறமுங் கலந்து உயிர்க் குயிராயிலங்குகின்றானோ; அவ்விறைமுதற் பொருளாகிய தண்ணளியானை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௮. யாவன் தன் வியாபக சக்தியினால் பேராற்றலுடன் உலகங்களைப் படைத்து, பரந்து செல்லும் நீரை யொப்ப யாண்டுஞ் சூழ்ந்து யாவற்றையுங் கண்காணித்து வருகின்றானோ; யாவன் சீரிய பொருட்களிலும் உயிர்களிடத்தும் சிறந்த குணஞ் செயல் தோற்றங்களை அமைக்கின்றானோ; அத்தகைய அருள் வடிவினனாகிய இறைவனை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௯. யாவன் இயற்கை யொழுங்கிற்கிணங்க மண்ணுலகினையுஞ் சோதி மண்டலங்களையும், நீரையுங் காற்றையும் இன்பந்தரும் பொருட்களையுந் தோற்றுவித்துச் சீவர்களைப் பரிபாலிக்கின்றானோ; அவன் உயிர்களுக்கு யாதும் இடுக்கண் புரிவதில்லை. அத்தகைய அறவடிவினனாகிய இறைவனை நாம் ஆன்மார்ப்பணமாக வணங்குதல் வேண்டும்.

௰. மக்கட்கிறையே! நின்னையன்றிப் பிறரான், இந்நிலையியற் இயங்கியற் றோற்றங்கனைத்தையுங் காத்தற் கியலா. நின்னை யொப்பாரு மிக்காரு மிலர். நாங்கள் யாவற்றை விரும்பி நின்னை இறைஞ்சுகின்றோமோ அவற்றை அளித்திடுக! நாங்கள் செல்வங்கட்குத் தலைவர்களாயிலங்குமாறு அருள் புரிந்திடுக!

பீஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்.

(பல்லவி)

கரும்புத் தோட்டத்திலே—ஆ
கரும்புத் தோட்டத்திலே.

1. கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே—ஹிந்து
மாதர் தன்னெஞ்சு கொதித்துக் கொதித்து மெய்
சுருங்குகின்றனரே—அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையோ வொரு
மருந்திதற் கில்லையோ—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றாரந்தக்
(கரும்பு.)

2. பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயுமிரங்கு மென்பார் தெய்வமே—நின
தெண்ண மிரங்காதோ—அந்த
ஏழைகளங்கு சொரியுங் கண்ணீர் வெறும்
மண்ணிற் கலந்திடுமோ—தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே யங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின் றாரந்தக்
(கரும்பு.)

3. நாட்டை நினைப்பாரோ—எந்த
நாளினிப் போயதைக் காண்ப தென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ—அவர்
விம்மி விம்மி விம்மி விம்மி யழுங் குரல்
கேட்டிருப்பாய் காற்றே—அவர்
விம்மி யழவுந் திறங் கெட்டுப் போயினர்
(கரும்பு.)

4. நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே யந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ—ஹே
வீரகாளி, சாமுண்டி காளி!
(கரும்பு.)

பாரதி.

சரித்திரப் பகுதி.

ஜாவாவில் ஹிந்துக்களின் சின்னங்கள்.

(மொழிபெயர்ப்பு)

இந்தியாவிற்கும் ஜாவாவிற்கும் மிக்க பண்டைய இணைப்புகள் உள்ளன. இவைகள் தற்சமயம் கால மாறுபாடுகளினால் நன்கறியப் படாமலிருக்கின்றன. இவைகளை நாம் அறிந்துணர வேண்டுமானால் நாம் (1) நாட்டின் பண்டைய நாணயத்தின் மேல் வாசகங்களினாலும் பாரம்பரியங்களினாலும் அறிந்துணர வேண்டும்; (2) தற்சமயம் மக்களின் ஐதிகங்களைக் கவனித்து முன்னாட்களிலுள்ளிருந்த பொருத்தங்களை அறிந்துணர வேண்டும்; (3) சிலாலேகங்களின் ஆராய்ச்சிகளினால் அறிந்துணரல் வேண்டும். (5) பண்டைய சிற்பங்களின் திருஷ்டாந்தங்களினால் அறிந்துணரல் வேண்டும் இவைகளில் பின் கண்டவைகளே ஜாவாவில் பெருகி யுள்ளன. ஜாவாவில் மத்தியபாக வனாந்தரங்களில் பண்டைய நாட்களின் சிலாலேகங்களும் சில்பங்களும் நாட்டின் பழமைகளைக் காட்டிக்கொண்டு வெளிவருவதனால் இவைகளை ஆராய்வோமானால் நமக்கு இந்தியாவையும் ஜாவாவையும் இணைக்கக்கூடிய பல ஆதாரங்கள் கிட்டும் என நம்பப்படுகின்றன. இவை யன்னியில் ஜாவாவின் சரிதைகளைப்பற்றி வெளி நாட்டினர் பலர் கூறியுள்ளார். இவைகளில் முக்கியமாக ஸ்ரீமான் பாஹியன் தன் யாத்திரை விபரங்களை வரைந்துள்ளார். சைனாவின் உத்தியோகஸ்தர்கள் ஜாவாவின் விபரங்களையும் அரசியல்களின் குறிப்புகளையும், சைனாவிற்கும் ஜாவாவிற்கும் ஏற்பட்டிருந்த தீர்வைகளையும் வசூலித்த விபரங்களையும் பற்றி எழுதி யுள்ளார்கள். இவைகளுடன் அரபிய அறிஞர்களும் ஜாவாவின் பல சமயங்களைப்பற்றி வரைந்துள்ளார்கள்.

ஜாவாவின் முன்னாட்களினது ஹிந்து சின்னங்கள்.

ஜாவாவின் பாரம்பரியங்கள் தம் நாட்டில் ஹிந்துமதப் பெருக்குகளைக் கொண்டிருந்தன வெனக் கூறுகின்றன. ஜாவானியர்கள் வெளிநாட்டிலிருந்து ஜாவாவிற்கு மூன்று முறையாக வந்து குடி புகுந்தனர்களெனச் சொல்லப் படுகின்றனர். இவைகள் ஒன்றின் பின் ஒன்றாக இருந்தனவா அல்லவா வென்பதை நாம் நன்கு அறியக் கூடிய வகைகளில் இல்லை. எனினும் இம்மூன்று முறையில் குடியேறின கூட்டங்கள். (1) மேல் ஜாவாவிலும், (2) மத்தியஜாவாவிலும், (3) கிழ் ஜாவாவிலுல் சிலர் மதுமு என்ற தீவிலும் குடி புகுந்ததாகச் சொல்கின்றனர். இவர்கள் இம்மூன்று பாகங்களில் குடியேறின சமயத்தில், ஜாவாவில் அநாகரீகங்களில் பெருகின மக்கள் வசித்துக் கொண்டிருந்தார்களெனவும் சொல்கின்றனர். மேல் ஜாவாவில் குடிபுகுந்த 'ஜாவானியர்கள்' என்பவர்களுடன் ஒற்றுமையாக எந்நாட்களிலும் இருந்ததில்லை யெனவே சொல்லுகின்றனர்.

இவர்களின் பாஷை நடவடிக்கைகள் மனப்போக்குகள் முற்றிலும் மாருகவே இருந்தனவெனவும் ஜாவாவிலிருந்தவர்களுடன் அடிக்கடி போராட்டங்களில் ஈடுபட்டே யிருந்தனர்களெனவும் இவ்விரு நாட்டினர்களுக்கும் இடையில் திரிபாமாலி என்ற நதி ஓடிக் கொண்டு இவர்களைப் பிரிவுற்றேயிருக்கச் செய்து கொண்டிருந்தமையினுல் இந்நதியை இவர்கள் தடுத்தாளும் நதியெனவும் கூறியுள்ளார்கள். இந்நதியும் இந்நதியின் இரு பக்கங்களிலுமுள்ள அடர்ந்த சிறிய வணங்கர் சுண்டானியர்களையும், ஜாவானியர்களையும் பிரிக்கும் எல்லைகளாக சுபாவீகத்தில் ஏற்பட்டுள்ளன, இம்மக்களிருவரும்—மேல் ஜாவானியரும் மத்திய ஜாவானியரும்—மிக்கச் சிறந்த விவசாயிகள். இவர்கள் தம் நாட்டை நல்வாசனைச் சரக்குகள், பழவகைகளினுல் பயிரிட்டு, மிகச் செழிப்புள்ள நாடாக்கிக் கொண்டிருந்ததினுலேயே, ஜாவா நாடு பஸிபிக் மகா சமுத்திரத்தின் பல தீவுகளில் மிக்க சிறந்த தீப கல்பமெனக் கூறப்பட்டுள்ளன. இவர்கள் பூமியை உழுது பயிரிடுவதுடன், கடலின் பண்டங்களாகிய ஆமை, நண்டு, மீன் முதலியவைகளையும் பிடித்துத் தம் உணவுப் பண்டங்களாகிக் கொண்டிருந்தனர். இவர்கள் இத்தொழில்களில் ஏனைய தீப கல்பத்தினர்களைக்காட்டிலும் மிக்க மேம்பாடுகளை அடைந்திருந்தனரெனவே தெரிய வருகின்றது.

இச்சுண்டானியர்கள் மேல் ஜாவாவில் குடி புகுந்த நாட்களில் இரும்பைத் தம்முடன்கொண்டு வந்ததாகவும் இவைகளைப் பலவித கருவிகளாகவும், பண்டங்களாகவும் செய்து விட்ட பின்னர் இவர்கள் கற்களின் பாறைகளிலிருந்து அநேக வகையான பண்டங்களையும் ஆயுதங்களையும் தயாரித்து உபயோகிக்க முற்பட்டார்களெனவும் இவர்கள் தம் நாட்களில் ஜாவாவில் ஏற்பட்டிருந்த இந்து மன்னர் ஆட்சிகளிலும் சீர்பெற்றே இருந்தனர்களெனவும் சொல்லப்பட்டுள்ளது. மத்திய ஜாவாவில் குடிபுகுந்த மக்கள் தாமும் தாம் குடிபுகுந்த நாட்டின் மக்களைப் போலவே ஒழுக முற்பட்டிருந்தார்களெனவும், இவர்கள் சித்திரம் எழுதுவதில் மிக்க சிறந்தவர்களாயிருந்தார்களென வும், இவைகளை தம் இல்லங்களின் வாயில்களில் தொங்கவிட்டு வைத்துக் கொண்டிருந்தனர்களெனவும், இச்சித்திரங்களைத் தம் மூதாதையரின் சின்னங்களாகவே எழுத முற் பட்டிருந்தார்களென வும், இவைகளை நன்னுட்களில் தொழுதும், போற்றிப்பாடியும், தூப தீபங்களினுல் சிறப்பித்தும் வந்தார்களெனவும், இம்முன்னேர்களை நோய் நாட்களிலும் விவாக நாட்களிலும் மிக்கனவாகப் போற்றினுர்களெனவும், சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் இந்து மன்னர்களின் ஆட்சியில் இராமாயண மகாபாரதக் கதைகளைச் சித்திரங்களாக வரைவதில் நியமிக்கப்பட்டுக் கீர்த்தி வாய்ந்தவர்களார்களெனவும் தெரிகின்றது. சுண்டானியர்கள் இவ்விதமாகத் தம் முன்னேர்களைப் போற்றுவதில் ஈடுபட்டிருக்கவில்லை. சில முக்கிய நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் தம் முன்னேர்களை இவர்கள் கவனிப்பதேயில்லை. இற்சில சமயங்களில் இவர்கள் களியாட்டங்களை ஏற்படுத்தும்போது

முன்னோர்களின் வேடங்களைப் பூண்டு நடிக்கவும் ஈடுபட்டிருந்தனர். இவைகளை வேயாங் எனக் கூறினர். இவைகளில் ஈடுபட்டிருந்த தலைவன் இளைஞர்களையும் முன்னோர்களின் வேடங்களைத் தரித்துக் கண்காட்சிக்கெனவும் களிப்புக்கெனவும் கூடியிருக்கும் பொது ஜனங்களை உற்சாகப்படுத்த செய்து கொண்டிருந்தனன்.

இவ்விரு வகுப்பினர்களும் விவசாயத்தை நட்சத்திரங்களின் போக்குகளைக் கணக்கிட்டே செய்துகொண்டிருந்தனர். மிருகசிர நட்சத்திரத்தை மாலையி லுதிக்கக் கண்டவுடன் நெல் விதையை விதைக்க ஆரம்பிப்பார்கள். இவை சாதாரணமாக டிஸம்பர் மாத நடுநாட்களில் காணப்படும் மிருகசிர நட்சத்திரம் வானத்தில் இருக்கும் வரை இவ்விவசாயிகள் பயிரிடும் தொழிலில் இருப்பர். மே மாதங்களில் இம்மிருகசிர நட்சத்திரம் காலையில் அஸ்தமிக்கும்போது விவசாயிகள் விடுமுறையைக் கொண்டிருப்பார். ஜுலை மாதத்தில் இமிருகசிர நட்சத்திரம் உதயத்தில் வெளிவரும்போது விவசாயிகள் பயிரிட முயற்சிப்பர். இப்பயிரை!அக்டோபரில் அறுவிடை செய்வார். அறுவிடையானவுடன் டிஸம்பர் மாதத்தில் பின்னரும் விதைகளை விதைக்க உழுது நிலத்தைத் தயாரித்துக் கொள்வர். இவ்விதமாக இம்மக்கள் தம் விவசாயங்களை மிருகசிர நட்சத்திரத்தை ஒட்டியே செய்வர். இந்நட்சத்திரம் வெளிவராத இரண்டு மாதமும், விடுமுறையாகவே இருக்கும். வருடத்தில் பத்து மாதம் விவசாய முறையிலீடுபட் டிருப்பர். இவர்களில் சிலர் வருடத்தை 300 நாட்களாகப் பகுத்து 10 நிலவுகளில் பயிர்வேலைகளைச் செய்யவும் 2 நிலவுகளில் விடுமுறையையும் கைக்கொள்வர். இவர்களுள் இந்நெல் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் பெரும் சச்சரவுகள் ஏற்படும். இச்சச்சரவுகளை விடுமுறை நாட்களில் தீர்த்துக்கொள்வார். ஏராளமான நெல் பயிர்களை இவர்கள் ஜாவாவில் பயிரிடுவதினால் இந்நாடு நெல் நாடென ஏனைய தீபகல்பத்தினரால் சொல்லப்பட்டுள்ளது. இந்நாட்டிலிருந்து ஏராளமான நெல் சைனாவிற்கும் இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்ய வருடந்தோறும் தனவந்தர்களான வியாபாரிகள் ஜாவாவில் தங்குவ துண்டு.

ஜாவாவைப் பற்றின சில விபரங்கள் இராமாயணத்தில் இருப்பதாகச் சொல்வர். இங்கு ஜாவாவை ஏழு அரசியல் கொண்ட தீபமெனவும் பொன் வெள்ளிகளினால் தட்டார்கள் சிறப்பிக்கச் செய்துள்ள கற்பமெனவும் கூறப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். கிறிஸ்துவ ஆட்சி நாட்களில் இத்தீபகற்பம் மிகச் செழிப்பும் ஐஸ்வர்யமும் கொண்ட நாடென கூறப்பட்டுள்ளது. இந்துக்களும் ஜாவானியர்களும் உள்ள இணைப்புகளை நாம் மேல் ஜாவா மத்திய ஜாவா கீழ் ஜாவாவிலேயே காணலாம். கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றுண்டுகளில் மேல் ஜாவாவில் இந்துக்கள் குடி புகுந்திருக்கலாமெனச் சில ஆராய்ச்சியினர்கள் துணிபு கொள்வர். இவர்கள் கோதாவரி கிருஷ்ணா நதிக்கரையிலிருந்த கலிங்க அரசியலிருந்து வந்திருக்கலாமென ஊகிக்கின்றனர். இவ்விந்துக்கள் இந்தியாவிற்கும் சைனா

விற்றும் வியாபாரம் செய்து கொண்டிருந்த நாட்களில் ஜாவாவில் தங்க நேரிட்டிருக்கலாமெனவும் பின்னர் இந்நாட்டின் செழிப்புகளைக்கொண்டு மேல் ஜாவாவில் குடியேறி யிருக்கலாமெனவும் பலர் அபிப்பிராயப் படுகின்றனர். இவ்விதமான மக்கள் போர்னியோவிலுள்ள கோதை என்ற நதிக்கரைகளில் குடியேறி யிருப்பதாகவும் தெரிகின்றன. ஜாவாவில் குடியேறியுள்ள இந்துக்கள் அந்நாட்டின் இனத்தினர்களைக் காட்டிலும் மிக்க சீரும் சிறப்பையும் கொண்டுள்ளார்களெனப் பண்டைய சுண்டானியர்களைக் காட்டிலும் மேம்பட்ட திசைகளில் உள்ளவர்களெனவும் விளங்குகின்றன. இருப்பினும் இவர்கள் சுண்டானியர்களைச் சீர் திருத்தும் முறைகளில் ஈடுபடச் செய்ய முற்பட்டனரெனவும் தெரியவில்லை. எனினும் இவர்களில் மாறுபாடுள்ள நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் விசேஷ வெறுப்புகளில் ஈடுபடாமலே ஒத்துவாழ்ந்தன ரெனவே காணப்படுகின்றது. இந்நாட்டில் இருக்கும் இந்துக்களில் சூத்திரர் என்ற வகுப்பு கிடையாது. சூத்திரர்களென்ற வகுப்பைச் சார்ந்தவர்களாக இவர்கள் சுண்டானியர்களைக் கருதுகின்றனர். எனவே இவர்களினுள் விவாக முறைகள் கிடையா.

இக்கலிங்க நாட்டு இந்துக்கள், சுண்டனியர்களுக்கு 'பாடிக்' என்ற நெசவுவேலையைக் கற்பித்துள்ளார்கள். இச்சுண்டானியர்கள் இவ்வேலையை மேல்ஜாவா முழுவதிலும் செய்து ஏனைய பாகங்களுக்கும் பரவச் செய்கின்றனர். இந்நெசவு வேலையில் உபயோகிக்கும் நூல்களை நீலத்தில் மாத்திரம் முன்னம் துவைத்துக் கொண்டிருந்தனர். ஏனெனில் 'டாரோயிம் என்ற ஒரு வகைச் செடியிலிருந்து நீலம் ஏராளமாகச் சுண்டானிகளால் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது இச்செடிகள் மேல்ஜாவாவின் பெரிய நதியாகிய டாவுரீம் என்ற ஆற்றங்கரையில் ஏராளமாக விளைகின்றன. எனவே இந்நாட்டையும் இச்செடிகளையும் சுண்டானியர்கள் 'டாவுரீம்" என அழைக்கிறார்கள். இக்கலிங்க நாட்டினர் நெசவுத்தொழிலைக் கற்பிக்கவே இந்நீலத்தை சாயமேற்றுவதில் உபயோகிக்க முற்பட்டுப் பல அழகிய உடைகளை ஆண் பெண்மக்களுக்குத் தயாரிக்கச் சுண்டானியர்கள் முற்பட்டுள்ளார்கள். இவ்வுடைகளின் சாயத்தை ஒருபுறமே ஏற்றுவர். மருபுறம் மெழுகினால் மெழுகப்பட்டிருக்கின்றமையால் சாயத்தில் துவைக்கும்போது ஒரு புறமே சாயம்பிடிக்கும். பின்னர் சாயம் நனைத்த பாகத்தை மெழுகினால் மெழுகி வேறு சாயத்தைத் துவைக்கவே அவை இருவித சாயமாகி விடும். இந்நாட்களில் நம் நாட்டில் பலவித சாயநூல்களைத் தறியில் இணைத்து நெய்வது போல் இவர்கள் அந்நாட்களில் திணிவை செய்து முதல் ஒரு விதம் சாயம் நனைத்தும் பின்னர் இரண்டாம் பாகம் நனைத்தும் வந்தனர். இன்னும் இதில் பல வித கொட்டடிகள் முதலியவைகள் போடவும் செய்வர். அநேக வித சாயங்கள் கொண்டவைகளை உயர்தர மக்கள் ஜாவாவில் உபயோகிப்பர். இவைகளின் விலையும் அதிகமாகவே இருக்கும்.

யசோதரன்.

(566—ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாயம்—V.

தரும சிரவணம்.

யசோமதி மன்னன் அறநெறி வழுவி அரசபோகமே மெய்ப்போகமெனக் கொண்டு உச்சயினியை ஆண்டுவரும் நாளில், ஓர் நாள் வில் வேல் வாள்களை முதலியவைகளைத் தாங்கி வேடுவரும் வேட்டைநாய்களும் சூழ, நடுநிலை பிறழா நமனை போல் கானகம் நோக்கி வேட்டைக்கெழுந்தனன். அவன் சென்ற காட்டில் ஐம்பெரும் பூதங்களை வென்று தவநெறியி லொழுகும் சுதத்த முனிவர் எனும் பெரியார் ஓர் புடை யிருந்து யோகு செய்து கொண்டிருந்தார். அவரது மகிமையினாலே அவ்வனத்தில் வாழும் மிருகங்களெல்லாம் தமக்குள் செற்றமுஞ் சினமுமின்றி நேசபாவத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து ஒன்றை பொன்று விசுவாசித்து வந்தன. அதனால் புலியும் பசுவும் ஓர் துறையில் நீர் குடித்தன; நாகமும் கீரியும் ஓரிடத்தில் கூடி வசித்தன; மானும் அரியும் மனமொத்து வாழ்ந்தன. இங்ஙனமே ஊர்வன நடப்பன வாதிய வெல்லாம் பகையின்றி வாழ்ந்தன.

அத்தகைய வனத்தில் அரசன் நுழைந்து செல்லும் பொழுது முதன் முதலாக ஆண்டிருந்த சுதத்த முனிவரைக் கண்டனன். அவர் போன்றோரைக் காணல் தான் செல்லும் வினைக்குச் சகுன விக்கின மெனக்கொண்டு முணு முணுத்துக்கொண்டே வேட்டைமேற் சென்றான். அவன் காட்டிலே வேட்டைநாயை ஏவியும், வேடுவரைத் தூண்டியும், வேல்வா ளெறிந்தும் வேலிற்கணை தொடுத்து விட்டும் மெய்வருந்த அங்குமிங்கும் ஓடி வேட்ட மாடினான். அவன் வேட்டையில் ஒரு மானாவது மரையாவது படவில்லை. அவன் இங்ஙனம் நெடுநேர மாடிக் களைத்து வெறுங்கையனாய் வீட்டிற்குத் திரும்புவதானான். மீள்கையில் முனிவரது கவனம் வரவும், அவராலேயே தனக்கு வேட்டையிற் பலித மில்லாமற் போயிற்றெனக் கொண்டு அவ ரிருப்பிடம் தேடிச் சென்றான். சென்றவன் அவரைக் கண்டதும் அவனுக் குக்கோபம் அதிகரித்தது, உடனே அவரைக் கொல்ல வெண்ணி அவன் அவரது தசைகளைப் பிய்த்துக் கொல்லும் படி தன்னுடன் சூழ்ந்து வந்திருந்த ஐந்நூறு வேட்டைநாய்களை ஏவினான். முனிவரது தவமகிமையினால் அவைகளெல்லாம் வலியிழந்து ஒரு வில்லளவுக்கப்பால் ஒன்றுஞ் செய்யக் கூடாமல் நின்று விட்டன. முனிவரோ அவைகளைச் சிறிதும் ஏறெடுத்துப் பாராது யோகத்தி லமர்ந்திருந்தார். அரசன் யசோமதி தான் ஏவிய ஞமலிகள் முனிவரை ஒன்றுஞ் செய்யாமற் போகவே கோபம் மிகுதியுங் கொண்டு உடைவாளை யுருவி முனிவர் பெருமானைக் கொல்ல நெருங்கினான்.

அப்பொழுது முனிவர் உபதேசமொழிகளைக் கேட்க அங்கு வந்திருந்த வணிகச் சிரேட்டியாம் கலியாண மித்திரன் என்பான் அரசனைத்தடுத்து, "அரசனே! அரசவை போகத்தைக் காலிற்பட்ட களௌனத்தள்ளித் தவமேற்கொண்டு குணக்குன்ருய் விளங்கும் முனிவர் பெருமானை வணங்குதல் விட்டு இங்ஙனம் நீ வாளோச்சி வருதலுங் கூடுமோ? இது மகா பாபத்திற்கு ஏதுவாகுமன்ருே? இப்பெருமான் இது ஆகவெனில் ஆகும்; இது அழியவெனில் அழியும்; மேகம் இவண் வந்து பொழிகவென மாரி பொழியும்; இவரால் ஆகாதது ஒன்றுமில்லை; இவர் பாத கமலங் களைப் பக்தி சிரத்தையோடு வணங்குவோர் பண்ணவரும் பார்த்திபருமாவர்; இகழ்ந்தோர் கடை நரகில் வீழ்ந்தழிவர்; முனிவர் நீங்காத நிழல்போல அருளுடையவர்; இந்திரர்கள் வந்து அடிபணியினும், உன்னைப்போல் வெய்ய நினைவு கொண்டு துன்பஞ்செய்வார் நெருங்கினும் இவர், இதுவெல்லாம் அவரவர் வினையின் விளைவென்றெண்ணி, இவர் எனது அன்பர், அவர் எனது பகைவர் என்ற வித்தியாசம் பாராட்டாமல் சமநிலையான தயா வொழுக்க முடையவர்; இவர் இவ்வுலகிலுள்ள எவ்வுயிரும் எம்முயிரென்று பாராட்டும் கருணாநிதி; அவ்வியமில்லா திவ்விய ஞானி. இத்தகைய கல்யாணகுணத்தராகிய முனிவர் பெருமான் அடிக்கமலங்களை நீ வணங்கி உனது தீவினைகளின்றும் நீங்கி உத்தமனுவாய்" என் றுரைத்தான்.

அரசன் சிரேட்டியின் உறுதிமொழிகளைக் கேட்டதும் சினந்தணிந்து, கையிற் பற்றியிருந்த உடைவாளை ஓர் புறம் வீசி யெறிந்துவிட்டுச் சிரேட்டியைப் பார்த்து, "சிரேஷ்டியே! உனது உறுதி மொழிகளைக் கேட்டு நான் உய்ந்தேன். இங்கு வீற்றிருக்கும் முனிவரோ ஆடை யணி கலன் களின்றியும், ஸ்நானபானங்களைத் தவிர்த்தும், மாசுபடிந்த மேனியராய் விளங்குகின்ருர். இவரை நான் வணங்குதல் கூடுமோ? உரைப்பாயாக" வென்றனன். அதற்குச் சிரேட்டி, "வேந்தே! இம்முனிவர் சகலவளங்களும் நிறைந்து தனக்கு ஒப்புயர் வில்லாமல் விளங்கும் கலிங்க தேயத்திறைவன்; களங்கமில்லா கங்கா குலத்துத்தலைவன்; மாற்றரை வென்று உலகை ஒரு குடைக் கீழாண்டமன்னரேறு; நீதிவழுவா நிருபன். இத்தகையனுன மன்னன், போகமும் பொருளும் இளமையும், மலையாடு மஞ்சு போலும், மஞ்சிற்ருேன்று மின்னல்போலும், வானவில்போலும் அழிந்திடும் இயல்புடையன வெனக்கொண்டு,

நாடுநக ரங்களு நலங்கொள் மடவாரும்,
ஆடுகொடி யானையதிர் தேர்புரவி காலாள்
சூடுமுடி மாலைகுழை தோள்வளையொ டாரம்
ஆடைமுத லாயினவொ டகல்கவென விட்டான்.

அகப்பற்று புறப்பற்றுக்களை நீக்கிய இவர் வானவரும் தானவரும் மண்ணவரும் போற்றும் தவமேற்கொண்டு உயிர்க் குறுதிநாடி, நாடு காடு மேடு என்னும் வித்தியாசமின்றி எங்குந் திரிதருகின்ருர்.

இவர் யான் என தென்பதையே மலமாசெனக்கொண்டு அவற்றை நீக்கி ஞானாபரணமே தனக்கணியாகக் கொள்கின்றார். ஆதலால் நாம் அவரை மாசுள்ளவரென்றுரைத்தற்கூடுமோ? இப்பெரியார் சந்நிதானத்திலன்றோ நீ ஏவிய கொடுமைபுரியும் ஞமலிகளும் அணுகாது அகல நின்று சாந்தங்கொண்டன. இப்பெற்றி மகாத்மாக்களுக் கன்றி மன்னர்க்கேனும் மனிதர்க் கேனும் கிடைக்கக் கூடியதா? ஆத்மபலத்திற்கு முன் உமது படைப்பலமும் பொருட்பலமும் யாது செய்யும்? ஆதலின் நீ மன்னனென்னும் செருக்கைமாற்றி இதுகாறும் கொலைத்தொழில் புரிந்து வந்த மாபாவ மகல இம்முனிவர் பாத கமலங்களை வணங்குவாய்'' என்றனன்.

சிரேட்டி கூறிய மொழிகள் பசுமரத்தி லறைந்த ஆணிபோல் மன்னன் மனத்திற் பதித்ததினால் அவன் செருக்குமாற்றி முனிவரது பாதகமலங்களிற் பணிந்தனன். அப்பொழுது அவன், 'நான் இதுகாறும் இப்பெரியார் மகிமை யுணராமல் தலை நிமிர்ந்து நின்றேன்; பெரிதும்பிழை செய்து விட்டேன். இப்பிழைக்குக் காரணமாயிருந்த இச்சிரசினை இப்பொழுதே கொய்து இவரது சரணாரவிந்தங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்' என்று மனத்தில் எண்ணினான். அதை உரையாதுணர்ந்த முனிவர், கையமர்த்தி அவனைப்பார்த்து "மன்னனே! மனத்தில் நினைந்ததை விடுக. மன்னுயிரையும் தன்னுயிர்போல் காக்கும் மன்னர் தன் இன்னுயிரைப் போக்குதல் தருமமன்று. நீ இன்னும் தரும வுரைகள் கேட்கவேண்டி யிருக்கின்றன. அவைகளைக் கேட்பாயாக" வென்றனர். அரசன், தன் மனத்துள்ளதை யறிந்துரைத்த முனிவரது ஆத்ம சக்திக்கு வியந்து அடிகளிற் பணிந்து, "சுவாமிகளே! எம்முன்னோரது பவ விருத்தங்களை யறிய நான் பெரிதும் விழைகின்றேன். அவற்றை அடியேனுக்கு முன்னம் உரைத்தருளப் பிரார்த்திக்கின்றேன்'' என்றான். முனிவரும் அவன் விருப்பின்படியே அவதி ஞானத்தால் அவனுடைய முன்னோர்களது விருத்தாந்தங்களை யறிந்து உரைப்பா ராயினர்.

"மன்னனே! நும் தந்தையின் தந்தையாகிய அசோகனென்பான் இவ்வுலகை நீதி வழுவாது ஆண்டு தான் செய்த தவப்பயனால் பின்னர் அமருலகுக் கிறைவனா யமர்ந்து தேவ மகளிரொடு இன்பந் துய்க்கின்றான். நினது அன்னை அமிர்தமதியோ, நின் பிதாவாம், யசோதரனையும் அவனது அன்னை சந்திரமதியையும் உணவில் நஞ்சூட்டிக் கொன்றாள். அஃதுடன் குஷ்ட நோய் கொண்ட சாரனும் அஷ்டபங்கனைச் சோர வழியால் சேர்ந்து தொழுநோய் கொண்டு மரண மடைந்து அருநரகில் வீழ்ந்தாள். அவள் ஆண்டடைந்ததும் நரகவாசிகளோடி வந்து அவளைப்பற்றி நெருப்புக்குழியிற் றள்ளிச் சுட்டனர்; உடம்பெல்லாம் புண் பெருக நையப்புடைத்தனர்; முன்னே நீ செந்தசைகளை வேகவைத்துத் தின்றாய், இப்பொழுது இதை விழுங்குவாய் என்று நன்றாய்க் காய்ந்த செப்புக் கட்டிகளை வாயில் வைத்துத் திணித்தனர்; அதனால் நாக்கு அற்று விழுந்தது, முகமும் வெந்தழலால் நைந்தருகியது. அதன் பின்னர் அவர்கள் எரியெனக்

காய்ந்த செப்புப்பாவை யொன்றினைக் கொண்டுவந்து, இது உன் சோரநாயகன், கட்டியணைகவென அமிர்தமதியை நையப்புடைத்த னர்; அவள் துடிதுடித்து அப்பாவையை அணைந்து உடலம் பொடியா னாள் ; பின்பு எப்பொழுதும் போல் அவ்வுடலம் உண்டாயிற்று. அதன் பின் அவர்கள், நீ உன் சுற்றத்தாரது பிறப்பாயமைந்த ஆடு பன்றி கோழிகளைச் சிறிதும் கருணை பாராட்டாது கொன்று தின் ருய் ; இப்பொழுது நீ இவைகளைத் தின்பாய் என்று அவளது அவய வங்களை வெட்டி வெட்டி வைத்தனர். அவைகளை யெல்லாம் அவள் மிக்க வருத்தத்துடன் தின்ருழித்தாள். அதற்கு மேலும் அவர் கள் விடாமல் அவளைச் செக்கிலிட்டு ஆட்டியும், நெருப்புலையிலிட்டு எரித்தும் கொலைக்கழுவில் தூக்கியும் துன்புறுத்தினர்கள். அவள் அவற்றிலெல்லாம் அளவிடற்கரிய துன்பங்களை யனுபவித்தாள். இன் னும் அவள் மீளா நரகத்தில் பல இன்னல்களை யனுபவித்துக் கொண்டிருக்கின்ருள். இது உன் அன்னையின் கதி. இனி உனது தந்தையாம் யசோதரனது வரலாற்றையும், அவன் அன்னை சந்திர மதி வரலாற்றையும் உரைக்கின்றேன் கேட்பாயாக: யசோதரனும் சந்திரமதியும் சண்டமாரி தேவிக்கு மாக் கோழிப் பலியிட்டு, அத்தீ வினையினல் விலங்கு கதியிற் புகுந்தனர் யசோதரன், மயிலாய், பன்றியாய், மீனாய், பின்பு இருமுறை ஆடாய் அதன் பின் கோழி யாகி ஏழாம் பவத்தில் உன் மனைவியின் வயிற்றில் அபயருசி யெனும் புத்திரனாய்ப் பிறந்தனன். சந்திரமதி, நாயாய், பாம்பாய், முதலை யாய், ஆடாய், எருமையாய், கோழியாய், பின்பு உன் தேவியின் வயி ற்றில் அபயமதி எனும் புத்திரியாய்ப் பிறந்தனள். இவையே நும ரது பவ விருத்தாந்தங்க ளாகும்'' என்ருர். அரசன் அவ்விருத்தாந் தங்களைக் கேட்டு மெய் விதிர்த்து நடுநடுங்கினான்.

எந்தையும் எந்தை தாயும்
எய்திய பிறவி தோறும்
வெந்துயர் விளைவு செய்த
வினையினேன் என் செய் கேனோ?
அந்தமி லுயிர்கண் மாய
அலைபல செய்து நாளும்
வெந்துயர் நரகின் வீழ்க்கும்
வினை செய்தேன் என் செய் கேனோ?
அருளொடு படர்தல் செய்யா
தாருயிர்க் கழிவு செய்தே
பொருளொடு போக மேவிப்
பொறியிலேன் என் செய் கேனோ?
அருளின துருவ மாய
அடிகளும் மடிகட் கேயுந்
தெருளலன் நினைந்த தீமைச்
சிறியனேன் என் செய் கேனோ?

என்று தான் செய்த பிழையினையும் தன் முன்னோர்க்குற்ற துன்பங் களையும் நினைந்து நினைந்து வருந்தினான். நெருப்பில் விழுந்த புழு

வெனத் திடிதுடித்தான். மேலும் மேலும் அவன் தேம்பித் தேம்பி யழுது முனிவரை நோக்கி, "எம் பெருமானே! மாவினல் உரு செய்து வதை செய்தாரே இத்தகைய துன்பத்திற் காளானாரானால், கருணாமூர்த்தியாய் விளங்கும் தங்களைக் கொலை செய்ய முன் வந்தோனாகிய எனக்கு எத்தகைய துன்பந்தான் வாராது. நான் இனி எக் கதியுறுவேனோ? எதவத்தைப் படுவேனோ? சுவாமிகள் உரைத் தருளல் வேண்டு''மென்று பிரார்த்தித்து நின்றான். முனிவரர், "யசோமதியே! வருந்தற்க. ஒருவன் அறியாத காலத்தில் செய்யும் பாவங்களெல்லாம் அவனுக்கு அறிவு உதயமானதும் நீங்கிப் போம். அறியாமல் செய்த தீக்கருமப் பலனின் அளவு, அதை அறியுங்காலமே எல்லையாகி நிற்கும், அதன் பின் நிச்சயமாய் அவர்கள் இன்பகதியையே அடைவர். இதற்குச் சான்று நும்மவரே யாவர். மேற்கதியடைய விழைவே ரெல்லாம்

அருள்புரி மனத்த ராகி
 ஆருயிர்க் கபய நல்கிப்
பொருள் கொலை களவு காமம்
 பொய்யொடு புறக்கணித்திட்
டிருள்புரி வினைகள் சேரா
 திறைவன தறத்தை யெய்தின்
மருள்செய வருவ துண்டோ
 வானவ ரின்ப மல்லால்?

நீயும் பொய் கொலை களவுகள் காமாதிய தீக்கருமங்களை நீக்கித் திருவற மருவி ஒழுகுவையேல் உன்னையும் தீவினை வந்து பற்றா. வேண்டுதல் வேண்டாமை யிலா னடி சேர்ந்தார்க் கியாண்டும் இடும்பை யில—ஆதலின் நீ இருள் சேர் இருவினையுஞ் சேரா இறைவன் மாட்டு அன்பு செலுத்திப் புகழ் புண்ணியங்களைப் பெற்றுய் வாயாக'' என்றனர்.

என்றலும் அரசன் முனிவர் பாதத்தை மும்மையும் வணங்கி நெஞ்சு நெக்குருக அவரைத் துதித்து விடை பெற்றான். தீவினைகட் கேதுவாய் விளங்கிய மன்னன் முனிவரது உபதேசத்தினாலும் காட்சியினாலும் நன்ஞானமும் மனத்தெளிவுங் கொண்டான். 'வென்றவர் சர ணடைந்தார் வினைப்பது வென்றி யன்றோ.'

யசோமதி அதன்பின், தான் நல்வழி யுய்ப்பதற்குக் காரணனாய் விளங்கிய கல்யாண மித்திரனைப் பார்த்து "நன்னண்ப! உன்னுடைய உறுதிமொழிகளாலேயே நான் தீவினையினின்றும் உய்ந்தேன். நீயே இவ்வகையில் எனக்குக் காரணகுருவாகின்றாய். எம்மடிகளோடு உன்னையும் எனக்கு இறைவனாக வைத்து நான் எண்ணுகின்றேன்'' என்று நன்றியுரைகள் பல கூறினன்.

அதன்பின் மன்னன், தம்மக்களாம் அபயருசி அபயமதியரை அழைத்து, "என் அருமை மக்களே! உங்கட்குக் கடந்த பிறவிகளில் நான் பல இன்னல்களை இழைத்ததாகச் சுதத்த முனிவர்பால்

கேட்டுணர்ந்தேன். அதற்காக என்னை நீங்கள் மன்னித்தருளவேண்டும். இனி நான் இந்த இராச்சிய பாரத்தை ஒரு கணமேனும் தாங்கியிரேன். இதனைப்பெற்றுக் கொண்டு என்னைத் தவஞ்செய்ய விடுவாயாக வென அரசன் அபயருசியை வேண்டி, அவன்க்கு முடி சூட்டி யாவையும் துறந்து முனிவரை யணுகி தீக்ஷித்துக் காட்டில் தவஞ் செய்யலானான். கல்யாணமித்திரனும் மற்றும் மன்னரும் அரசனைத் தொடர்ந்து முனிவரிடம் தீக்ஷித்துத் தவஞ் செய்வதானார்.

அரசன் அங்ஙனமாக அபயருசியும் அபயமதியும் சுதத்த முனிவரை 'யணுகி, தங்கள் பழம்பிறப்புணர்ந்து அதற்காக வருந்தி, உலகாட்சியையும், மன்னர் மாட்சியையும் துச்சமென வெண்ணித் தாமும் தந்தையைப் போலத் துறவு மேற்கொள்ளத் துணிந்தனர். துணிந்ததும் அபயருசி தனது அரசுரிமையை இளவலாம் யசோதரனுக் கீந்து, தங்கை அபயமதியுடன் சுதத்த முனிவரை யண்மி, தங்கட்குத் தீக்ஷை தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு அவர், "நீங்கள் மிக்க இளையர்; பசி தாகங்களைப் பொறுத்துத் தவஞ் செய்தல் உங்களால் இப்பொழுது இயலாத காரியம். நீங்கள் நல்லொழுக்கமே கொண்டு சில காலம் என்னிடமிருந்து தர்ம சிரவணஞ் செய்மின்" என்றார். அவர்களும் கொலை பொய் களவு பிறர்மனை நயத்தல் விபரீத பரிக்கிரகமாதியவைகளை நீக்கி நல்விரதம் அனுஷ்டித்துத் தர்ம சிரவணஞ் செய்து முனிவருக்குச் சீடராய் விளங்கினர்.

"இப்பொழுது தான் சுதத்தமுனிவர் தவக்குழாக்களோடு இந்நகர்ப் புறத்தேயுள்ள தொரு சோலையில் வந்து தங்கினர். அவர்கள் வழி நடையினால் நேர்ந்த தோஷங்களுக்குப் பிராயச் சித்தமாக அன்று எல்லோரும் உபவாசமிருந்தனர். பாலசந்திரரைப் போன்று விளங்கிய அபயருசி அபயமதியாம் பாலர்கள் இவ்விரதம் அனுஷ்டிப்பது கடினமா மெனக்கொண்டு முனிவர் அவர்களை நகர்க்குள் சென்று ஆகார முட்கொள்ளும்படி ஆஞ்ஞாபித்தனர். அவர்கள் நகர வீதிகளிற் சென்று இல்லறத்தோர் எதிர்கொண்டு இட்ட உணவை ஏற்றுச் சென்றனர். அவர்களையே ‡சண்டகருமன் பற்றி இங்குக் கொணர்ந்தான்."

"அங்ஙனம் கொணரப்பட்டவரே அபயருசி அபயமதி என்பாராகிய நாங்கள். இதுவே எங்கள் பிறப்பு வரலாறு. ஒருவர் முற்பகல் தீவினை செய்யின் பிற்பகல் அதன் பயனும் துன்பத்தை அனுபவிப்பர் என்பதற்கு இவ்வரலாறே எடுத்துக்காட்டாகின்றது. சாமம் கதுவப்பட்டார் பின் அனுபவிக்கும் பிழைக்கும் இதுவே சான்றாகின்றது. இறைவனது திருவற மருவினோர் விண்ணின்பம் பெறுவார் என்பதற்கும் இதுவே திருஷ்டாந்தமாகின்றது," என்று அபயருசி மாரிதத்த மன்னனுக்குத் தங்கள் பிறப்பு வரலாறுகளையும், அவற்றில் நேர்ந்த நன்மை தீமைகளையுங் கூறிப் பின்னுங் கூறுவான்.

"மாரிதத்த மன்ன! மாக்கோழி யொன்றினைச் சண்டமாரி தேவிக்குப் பலியிட்ட காரணத்தானே முன்பவத்தில் யசோதரன்

சந்திரமதியாயிருந்த நாங்கள் பல பிறப்புக்கள் தோறும் விலங்கு கதியிற் பிறந்து பல இன்னல்களை அனுபவித்தோமென்றால் பல்லுயிர்களைப் பலியிடும் உனக்கு எத்தகைய கதிதான்வாய்காதென வெண்ணி நாங்கள் நெஞ்சு நெக்குருகுகின்றோம்" என்றான்.

மாரிதத்தன் இவ்வரலாற்றினைக் கேட்டு மெய்சிலிர்த்து அபயருசியைப் பார்த்து, "என் வினைக்கு அபயமளித்த அபயருசியே! நான் நின்னுப தேசத்தால் நல்வழிப் பட்டேன். அருநரகில் அனுபவிக்கப்படும் பல கோடி துன்பத்தினின்றும் பிழைத்தேன். நின் அருள் மொழியே பவக்கடல் நீந்தும் புணையெனக் கொண்டு மாதவக் கரையேற மனம் வலித்தேன்" என்று கூறி,

இன்சொல் மாதரும் இருங்கிளைச் சுற்றமும்
எரித்திர ளென வஞ்சிப்
பொன்செய் மாமுடிப் புதல்வருட் புட்ப
தந்தற் கிதுபொறை யென்றே
மின்செய் தாரவன் வெறுத்தனன் அரசியல்
விடுத்த வருடன் போகி
முன்சொல் மாமலர்ப் பொழிலினுள் முனிவரற்
றொழுது நன்முனி யானான்.

மாரிதத்தன் தன் மூத்த குமாரனான புட்பதந்தனுக்குத் தனது மணிமுடி சூட்டி, மக்கள்மனை பொருளாதியவைகளைத் துறந்து, சுதத்த முனிவர்பால் தீக்ஷித்து முனியாயினபின், பன்னெடுங்காலம் தவநெறி வழாது நின்று தியானசுத்தனாய் முடிவில் சரீரபரித்தியாகஞ் செய்து விண்ணவர்க்கோர் சூளாமணியாகி அரமகளிரொடு இன்பந்துய்த்து வந்தான்.

அவன் அங்ஙனமாக, அபயருசியும் அபயமதியும் பலகாலம் பக்தி சிரத்தையுடன் ஆசாரியரிடத்தே தருமங் கேட்டுணர்ந்து பலவிரதங்களை அனுஷ்டித்துப் பின்பு முனிவரிடம் தீக்ஷை பெற்றுத் தவஞ்செய்து சரீரமகன்றபின் விண்ணுலகடைந்து அமரசுகமனுபவித்தனர்.

மாசின் மாமணி மேனியின் வாசம்
ஒ ரோ சனைமண நாறத்
தேசொ ரோசனை திளைத்திட முளைத்தெழு
தினகர னனை யார்கள்
ஆசி லெண்குணன் அவதி யொடமைந்
தன ரலைகட லளவெல்லாம்
ஏசில் வானுல கிணையி லின்பத்தினி
லிசைந் துட னியல் கின்றார்.

நூற்பயன்.

வெருவுறு வினைவலி விலக்கு கிற்பது
தருவது சுரகதி தந்து பின்னரும்
பொருவரு சிவகதி புணர நிற்பது
திருவற நெறியது செவ்வி காண்மினே.

யசோதரன் முற்றிற்று.

லட்சுமி கடாட்சம் பெற வேண்டுமானால்?

என்ன செய்யவேண்டும்?

இக்காலத்தில் மட்டுமல்ல; எக்காலத்திலும் லட்சுமி ஸம்பத்து வேண்டாதவர்கள் யார்? அஷ்டலட்சுமிகளில் தன தான்ய ஸம்பத்து லட்சுமி ஸகல ஜாதி மதத்தினராலும் வேண்டப்படுகிறது. பணக்காரன் வேண்டுகின்றான்; ஏழை லட்சுமி கடாட்சம் பெறவேண்டி வருந்தி நிற்கின்றான். படித்தவனும் படிக்காதவனும் விரும்புகின்றான். விவசாயி அதற்காக வயல்களில் பாடுபடுகின்றான். தொழிலாளி நெற்றி வியர்வை நிலத்தில்விழ உழைக்கின்றான். படித்தவன் தான் படித்த படிப்பைக் கொண்டு லட்சுமி ஸம்பத்து பெறவிரும்புகின்றான் உத்தியோகஸ்தன் ஆபீஸ்களில் வேலைசெய்கின்றான். வியாபாரி கடைகளில் சாமான்கள் விற்பனை செய்து லட்சுமி தேவியைப் பிரார்த்தித்து நிற்கின்றான். ஆக இவ்வாறு ஒவ்வொரு உறையிலுமுள்ளோரும் தனலட்சுமியை அடைவதற்குக் கோரிநிற்கும் போது லட்சுமிதேவி வேண்டாமென்று சொல்லி ஓடிப்போனார்கள் யார்? இதுவரையில் உலகில் ஒருவருமில்லை. மகாதியாகிவான ஸங்யாஸிகளுக்குகூட லட்சுமியின் உதவி பிறஜனங்கள் மூலமாகவேனும் வேண்டப்படுகிறதென்றால் லட்சுமியை நாடாதவர்கள் பூவுலகில்' உண்டோவென்று கேட்கவும் வேண்டுமோ?

தமிழ் நாட்டிலுள்ள மக்கள் யாவரும் லட்சுமிதேவியின் கிருபை பெற்று, அவள் அனுக்கிரகத்தால் சுகிர்தம் பெறவேண்டுமென்னும் ஆசை மேலிட்டும், அனைவருக்கும் இன்பமாகப் பிடித்துள்ள அந்தத் தேவியின் திவ்ய நாமத்தை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டு மென்னும் கருத்துக்கொண்டும் சென்னை பேர் போன்ற பட்டு வியாபாரம் கே. எஸ். முத்தையா கம்பெனியார் அவர்கள் அபாரச் செலவு செய்து. 'லட்சுமி' பத்திரிகையைத் தவறாது பிரசுரித்து வருகின்றனர்.

இவ்வளவு மட்டுமல்ல; லட்சுமி ஸம்பத்தை அடைவதற்கான வழிகளிலும் வியாசங்கள் வெளியிட்டு, தமிழ் மக்களை நல்வழிகளில் உற்சாகப் படுத்தியும் வருகின்றனர். ஆகவே, இவ்வாறு உயர்ந்த நோக்கதுடன் நடைபெற்றுவரும் 'லட்சுமி'யைப் படிப்பவர்கள் எனது அனுபவங்கள் பிரகாரம் நடந்தால், அவர்களும் லட்சுமி ஸம்பத்தை அடையலாமென்பது நிச்சயம். அவையாவன:—

காலையில் எழுந்தவுடன் புருஷர்களாகட்டும் ஸ்திரீகளாகட்டும் ஸர்வகிருபா நிதியாகிய கடவுளை மனதில் தியானித்துக்கொண்டு எழுந்திருக்கவேண்டும்.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஸ்நானம் செய்யும் பழக்கமுடையவர்களாயிருந்தால் தேய்த்து ஸ்நானம் செய்து பிறகு அவரவர் குலசாரப்படி அனுஷ்டானங்கள் செய்யவேண்டும். ஸ்நானம் செய்யும் பழக்கமிராதவர்கள் கைகால் முகம் ஆகியவைகளைக் கழுவிக்

கொண்டு நியமப்படி அனுஷ்டானம் செய்யவேண்டும். ஸ்நானம் செய்வதே மேல் அனுஷ்டானக்கிரமம் பெருதவர்கள் சுத்தமான உடையுடனும், சுத்தமான மனதுடனும் ஐந்து நிமிஷம் தனியாக கிழக்கு முகம் பார்த்து உட்கார்ந்து "ஏ கடவுளே! எனது எல்லா அபாராதங்களையும் மன்னித்துக்கொள். உண்மை பேசும் உறுதியையும் அன்பையும் ஞானத்தையும் கொடு. கோபத்தை நீக்கிச் சாந்தத்தை அநுக்கிரகம் செய். வாழ்க்கையில் கஷ்டங்களை நீக்கி வறுமையைப்போக்கி சுகத்தைக்கொடு. நான் நியாயமாகச் செய்யுங் காரியங்களுக்குத் துணை நில். எனக்குத் தைரியத்தையும் சகிப்புத்தன்மையையும் அஹிம்சா தர்மபுத்தியையும் அருள்செய். எல்லா ஜனங்களும் சௌக்கியமாக விருக்கட்டும்." என்று தியானம் செய்ய வேண்டும். பிறகு எழுந்து வீட்டிலுள்ளவர்களிடத்திலும் பிறரிடத்திலும் இதமானமொழிகளை உபயோகித்து இதமாக நடக்கவேண்டும். அனுஷ்டானம் கிரமமாகச் செய்வோர்களும் ஜபமுடிவில் ஷை பிரார்த்தனையை தியானிக்கலாம்.

இதேபிரகாரம் சரியாகப் பகல் மணி 12 அடித்ததும், எந்தத் தொழில் செய்து கொண்டிருந்தாலும், எங்கிருந்தாலும், வண்டியிலும் மோட்டாரிலும் பிரயாணம் செய்து கொண்டிருந்தாலும், வியாபார ஸ்தலங்களிலோ, கச்சேரிகளிலோ வேலைசெய்து கொண்டிருந்தாலும், அடுப்பங்கரையில் சமைத்துக் கொண்டிருந்தாலும் ஸ்திரீ புருஷர்கள் காலையில் தியானம் செய்தாற்போல் வடக்கு நோக்கி ஐந்து நிமிஷம் தியானம் செய்யுங்கள். மேலும், நீங்கள் செய்த காரியங்களையோ உத்தேச காரியங்களையோ சொல்லி, கடவுளை அழைத்து அவரிடம் மனமாரச்சொல்லி, தைரியம் பெறுங்கள்.

பின்னர், மாலையில் மணி ஆறு அடித்ததும், அதாவது சூரியன் அஸ்தமன வேளையில் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு ஷை பிரார்த்தனையை மேற்கு நோக்கி உட்கார்ந்து செய்யுங்கள். தண்ணீரில்லையென்று காலம் கடத்தவேண்டாம். செய்யாமலுமிருக்க வேண்டாம், பாதகமில்லை. எங்கிருந்தாலும், பொதுக் கூட்டங்களின் மத்தியிலிருந்தாலும் கவலைப்படவேண்டாம். பகலில் செய்த பிரார்த்தனைகளை அன்புடன் மனமுருகிச் செலுத்துங்கள். வாழ்க்கை ஸமுத்திரத்தைக் கடந்து செல்வதற்குக் கடவுளைத் துணைக்குக் கூப்பிடுங்கள். தயாநிதியான கடவுள் வேண்டியதைக் கொடுப்பார். பாரத்தை அவர் மீது போட்டுவிடுங்கள்.

பொதுவாக மூன்று வேளை சாப்பிடும்போது, கடவுளை நினைத்து உண்ணுங்கள், கவலையை நீக்கி விட்டு, ஏற்றத்தாழ்வாக விருந்தாலும் ஸந்தோஷமாக உண்டு எழுந்து ஜோலிகளிருந்தால் பார்த்துவிட்டு ஸந்தோஷமாகப் படுத்துக் கொள்ளுங்கள். சயனித்துக் கொள்ளும் போது பகலில் செய்த காரியங்களின் நியாய அநியாயத்தைக் கவனித்து மனதைச் சோதனை செய்துகொண்டு, அநியாயகாரியம் ஏதேனும் செய்யப்பட்டிருந்தால் உடனே அதற்கு மன்னிப்புக் கேட்டுக்

கொண்டு மறுநாள் முதல் அது போன்ற அநியாய காரியம் செய்யத் துணிதல் கூடாது. கட்டோடு கெட்ட எண்ணத்தை ஒழித்துப் போடவேண்டும். தூக்கம் வரும் வரையில் அவரவர்கள் கடவுள் நாமங்களை மனம் நினையும்படி நிறுத்திப் பலதடவை சொல்லி ஆனந்த முற்று நித்திரை செய்தல் வேண்டும்.

இவ்வாறு தியானம் செய்து ஒருவன் அல்லது ஒருத்தி தனது தினக் கிரமவாழ்க்கையைக் கழித்து வந்தால், குறைந்தது மூன்று மாதங்களுக்குள் கடவுள் கோரிய பலன் கொடுப்பார். இது நிச்சயம்; ஸத்தியம்; ஸத்தியம். எனது அனுபவம். மலைக் குகையிலிருந்த ஒருவர் எனக்குச் சொன்னார், நான் அனுஷ்டித்து வருகிறேன், எனக்குக்கஷ்டம், தெரியவில்லை. அனுபவமானவுடன், வெண்ணெயைவைத்துக் கொண்டு நெய்க்கு அழும் ஜனங்களுக்கு இம் முறையைப் பகிரங்கம் செய்யச் சொன்னதால், நான் அங்ஙனமே செய்யலானேன். எனது பிற அனுபவங்களைப் பின்னர் 'லட்சுமி' யில் தெரிவிக்கிறேன்.

ஒரு கர்மயோகி.

பதினாரும் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஒரு வழக்கம் இருந்து வந்தது. தீய ஒழுக்கத்தை மேற்கொண்ட ஸ்திரீகளைச் சீர்திருத்துவதற்கு என்று அப்போது சில ஸ்தாபனங்கள் இருந்தன. இந்த ஸ்தாபனங்களில் ஜீவனத்துக்காக ஸ்திரீகள் கட்டாயமாக நூல் நூற்கும்படி செய்யப்பட்டனர்.

*　　*　　*　　*

1837-ம் வருஷத்தில் கோயமுத்தூர், சேலம், மதுரை, திருநெல்வேலி இந்த நான்கு ஜில்லாக்களிலிருந்தும் மொத்தம் ரூ. 22,81,000 பெறுமான கதர்த்துணி ஏற்றுமதியாயிற்றும். இதில் கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து மட்டும் ஏற்றுமதியான துணி சுமார் 5½ லட்சம் ரூபா பெறுமானது.

*　　*　　*　　*　　*

இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் கோயமுத்தூர் ஜில்லா கதர் ஏற்றுமதி விஷயத்தில் முன் நிலைமையை அடைந்திருக்கிறது. கிட்டத் தட்ட சுமார் 5½ லட்சம் ரூபா பெறுமான கதர் இப்போது கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து வெளியிடங்களுக்குப் போகிறது. ஆனால் கதர் உற்பத்தி விஷயத்தில் முன் நிலைமையை அடைந்ததாகச் சொல்லமுடியாது. ஏனெனில் முன்னம் கோயமுத்தூர் ஜில்லாவாசிகள் அனைவருக்கும் கண்டு மீதியானவையே ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆகையால் உற்பத்தி மிகவும் அதிகமாய் இருக்கவேண்டும். இப்போதோ உற்பத்தியில் பெரும் பகுதி வெளியே அனுப்பப்பட்டு விடுகிறது.

பெண்கள் பகுதி

கிருக கிருத்தியம் அல்லது வீட்டுவேலை.

இக்காலத்தில் வீட்டுவேலை யென்றால் சிறு பெண்களுக்கு வேம்பாக விருப்பதை நாம் பார்க்கின்றோம் சிறு பெண்கள் 12 வயது காலம் பிறந்த வீட்டில் காபி, டி, பருகிச் செல்வமாக விருந்து விட்டுப், பிறகு புக்ககம் செய்வதால் அங்குப் புருஷன் வீட்டு வேலை செய்வதற்கு வேலைக்காரியையோ வேலைக்காரனையோ வேண்டுகின்றார்கள். அநேகமாகப் பணக்காரவீட்டுச் சிறு பெண்கள் தான் வீட்டுவேலை செய்யப் பின்வாங்குகின்றார்களென்பது பிரசித்தம். இம்மாதிரி வீட்டு வேலை செய்ய சிறு பெண்கள் சோம்பேறித்தனம் கொள்வதுதான் நாட்டில் குழந்தை மரணம் அதிகமாவதற்கும் காரணமென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். பொதுவாக, பணக்கார வீட்டுப்பெண்கள் உண்பதிலும் உறங்குவதிலும் ஸதா காலங்கழித்து புதப்புது வியாதிகளுக்கு ஆளாவதற்கும், ஏழைவீட்டு ஸ்திரீகள் அங்ஙனம் ஆளாகாமலிருப்பதற்கும் காரணத்தை விசாரிப்போமானால், முந்திய வீட்டுப்பெண்கள் வீட்டுவேலைகளைச் செய்யாமலிருப்பதும் பிந்திய வீட்டுப்பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதும் ஆகும் என்பது நன்கு தெரிய வரும்.

கிருக கிருத்தியம் தேகப்பயிற்சிக்கு அவசியமானது. அது உற்றதானது. சிறுபொழுது முதல் வீட்டுவேலைகளில் பழக்கப்பட்ட பெண்கள் திடகாத்ர முள்ளவர்களாகவும் நோயற்றவர்களாகவு மிருக்கிறார்கள். நல்ல ஸந்தானங்களைப்பெற்று, நல்ல மனைவிமார்களாகவும் சகோதரிகளாகவும் வேலைக்காரர்களாகவும் எஜமானிகளாகவும் விளங்குகின்றார்கள். எல்லாம் தாய் தகப்பன் பெண்களைப்பழக்குவதிலிருக்கிறது. முக்கியமாக தாய்மார்கள் பெண்களைச் சரியான பழக்கத்தில் கொண்டுவரவேண்டும், கொஞ்சம் எழுதப்படிக்கத் தெரிந்த பெண்கள் சமையல் செய்வது கௌரவக்குறை வென்று கருதுகின்றார்கள். அந்த எண்ணத்தைப் பெண்கள் மனதினின்று தாய்மார்கள் போக்கடிக்கவேண்டும். தன் வீட்டுவேலையைத் தானே செய்து கொள்ளும் பெண்தான் சரியானபடி இல்லற தர்மத்தைச் செய்தவளாகக் கருதப்படுவாள். "நல்ல ஊழியனே நல்ல எஜமான்" என்ற பழமொழிப்படி வீட்டுவேலைகளைச் சரிவரச் செய்தவரும் பெண்ணை புருஷனும் மாமன் மாமியார் வீட்டாராலும் ஏன்? தேசத்தினராலும் போற்றப்படுவார். வீட்டுவேலை தெரிந்த பெண் அரைகுறையாய் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டாள். வேலைக்காரி இருந்தாலும் அவளிடம் இன்ன வழியில் வேலை வாங்கவேண்டுமென்பதை அறிந்திருப்பாள். எல்லோரிடத்திலும் அன்புடன் பேசி பிறர்மனதை நோகச்செய்யாமல் தன் காரியத்தையும் கவனித்துக்கொள்வாள். வீட்டுவேலை தெரியாத எஜமானியோ எப்பொ

ழுதும் வீட்டாரிடமும் வேலைக்காரிகளிடமும் குற்றம் குறைசொல்லிக்கொண்டு தினம் ஒரு வேலைக்காரி வேணுமென்று புருஷனைத் தொந்திரவு செய்துகொண்டிருப்பாள். வீட்டுவேலை தெரிந்து இல்லறம் செய்யும் பெண்கள்தான் இந்து ஸமுகக் கோட்டைக்குக்காவல் வீரர்களென்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதை ஈண்டு 'லட்சுமி'யைப்படிக்கும் பெண்களுக்கு ஞாபகமூட்டவே இச்சிறு வியாஸம் எழுதப்பட்டது.

"கப்பல் ஏறிப் பட்ட கடனைக் கொட்டை நூற்று அடைக்க முடியுமா?" என்பது மற்றொரு பழமொழி நூல் நூற்றல் வருந்தி உழைக்கவேண்டிய தொழில் என்றும், இதில் சொற்ப வருமானம் நிரந்தரமாக வந்து கொண்டிருக்கும் என்றும், திடீரென்று பெரும் பணக்காரராய்விட விரும்புவோருக்கு இராட்டை பயன் படாதென்றும் இதிலிருந்து தெரிகின்றன.

***

"ஒரு இராட்டை இருந்தால் ஒரு ஏர் ஓடினாற்போல்" என்பது மூன்றாவது பழமொழி. உழுதுண்டு வாழ்வாருக்கு உபத்தொழில் ஒன்று அத்தியாவசிய மானதென்பதும், விவசாயிக்கு ஏற்ற உபத் தொழில் நூல் நூற்றலேயாதலால் அவனுக்கு ஏர் எவ்வளவு அவசிய மானதோ அவ்வளவு இராட்டையும் அவசியமான தென்பதும் இதிலிருந்து வெளியாகும் பொருள்கள்.

***

பஞ்சாபில் குடும்ப வாழ்க்கை 1885-ம் ஆண்டில் கர்காம் ஜில்லாவில் ராமசுக் என்பவர் கொடுத்த வாக்குமூலம்:—

"1857-ம் வருஷத்தில் நாங்கள் நெசவு செய்ய ஆரம்பித்தோம். பிறர் நூலை நெசவு செய்து கொடுத்ததன்றி எங்களுடைய நூலாலும் ஒன்றிரண்டு சம்பாதித்தோம். ஒரு ரூபாயிக்கு வாங்கின இரண்டு சேர் நூலைக்கொண்டு ஒரு முழம் அகலத்தில் 40 கஜம் உள்ள ஒரு தான் நெய்யலாம். ஒரு தானுக்கு 5 அணா அல்லது 6 அணா கூலி கிடைக்கும். இவ்வாறு ஒழிந்த நேரத்தில் நெசவு செய்து சாப்பாட்டுக்குக் கவலையின்றி யிருந்தோம். ஒன்றரை ரூபா பெறுமான தறிசாமான்களை என்னுடைய மாமனார் எனக்குக் கொடுத்தார். 20 வருஷங்களுக்குப் பிறகு இன்னமும் அவைகள் உபயோகப்பட்டு வருகின்றன 4 அல்லது 5 நாள் வேலைக்கு 5 அணா முதல் 6 அணா வரையில் கூலி கிடைக்கிறது. மழை காலம் நான்கு மாதத்திலும் வயலில் வேலை அதிகமாயிருப்பதால் நெசவு செய்வதில்லை." (டிக்பி என்பரின் ஐசுவரிய பிரிட்டிஷ் இந்தியா என்னும் புத்தகத்திலிருந்தது.) குடி நூல்.

கதர் உடுத்துங்கள் ! ராட்டை சுழற்றுங்கள்!!

வியாதிக் கிருமிகள்

வியாதி எப்படிப் பரவினது ?

(ஸ்ரீமான் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

570-ம் பக்கத் தொடர்ச்சி.

பாஸ்டியூர், பட்டுநூற் பூச்சிகளுக்கு உண்டான வியாதி இன்னதென்று கண்டுபிடித்ததும், அஃது எப்படிப் பரவினதென்று கண்டு கொள்ளத் தொடங்கினர்.

ஆகாரத்திற்காக வைக்கப்பட்ட முசுக்கட்டை இலைகளின் மேல் புழுக்கள் நகர்ந்து செல்லும் போது, அவைகழிக்கும் மலமே வியாதி பரவுதற்கு முதற்காரணமாயிருந்த தென்று கண்டனர். வியாதியால் தொற்றப்பட்ட புழுவானது கழிக்கும் மலத்தில் முன் சொல்லிய வியாதிக் கிருமிகள் நிறைந்திருந்தன. அவ்வித மலத்தை, இலைகளை மேயும் மற்றப் புழுக்கள் அடிக்கடி தின்பதையும் பார்த்தனர்.

வியாதி பரவுதற்கு இன்னொரு காரணம்.

பட்டு நூற் புழுவின் முன்கால்களின் முனைகள், கூர்மையாக வளைந்து கொக்கி (Hook) போலிருக்கின்றன. இப்புழுக்கள் ஒன்றோடொன்று மேலுங் கீழுமாக நகர்ந்து செல்லும் போது, அவற்றின் கால்களின் கூர்மையான முனைகள் அவற்றின் உடம்புகளில் குத்திக் கொள்ளுகின்றன. இந்தச் சமயத்தில் அப்புழுக்களின் கால்களில் வியாதிக் கிருமிகள் நிறைந்திருக்கும் மலங்களைப் பூசிக் கொண்டிருந்தால் அவற்றின் உடம்பில் குத்திச் கொண்ட காயங்களின் வழியாய்ப் புகும்படி கிருமிகளைத் தொற்றவைத்து விடுகின்றன ; அன்றியும், வியாதியால் துன்பப் படும் புழுவைக் காயப்படுத்து வதினாலே, அப்புழுவி லிருந்து அநேக வியாதிக் கிருமிகளை அதன் கூர்மையான நகங்களி லொட்டிக் கொண்டு போய்த் தன் கூட்டாளிப் புழுவின் சரீரத்தில் தொற்ற வைத்து விடும்.

இஃதன்றி, புழுக்களை உற்பத்தி செய்யும் வீடுகளைச் சுத்தஞ் செய்வதற்காகக் கூட்டும் போது, அவற்றின் மலத்தில் அல்லது இறந்து போன புழுக்களி லிருக்கும் வியாதிக் கிருமிகள் தூசோடு கலந்து பறக்கும். அத்தூசு, அதற்குமுன் வியாதிக் கிருமிகள் கலந்த தூசு படாதிருந்த முசுக்கட்டை இலைகளின் மீதும் புழுக்களின் மீதும் படிந்திருந்தது. சிலவேளை காற்றினால் வியாதிக் கிருமிகள் வெகு தூரம் அடித்துக் கொண்டு போகப்பட்டன.

மேற் சொன்ன வற்றை யெல்லாம், பாஸ்டியூர் மிக்க பிரயாசையுடனும் சிரத்தையுடனும் சிற்றுரு விளக்கி யென்னும் பூதக்கண்ணாடி

யின் மூலமாய், பல காலும் நடத்திய சோதனைகளால் கண்டு பிடித்தனர். முதலில் அவர் செய்த வேலை முழுதும் பரிகசிக்கப் பட்டது. அநேக சாஸ்திரிகளி (Men of Science) ட மிருந்தும், பட்டுவர்த்தகர்களிடமிருந்தும் தூஷணையான கடிதங்களும், சில சமயம் அவரைக் கண்டித் தெழுதிய கடிதங்களும் அவருக்குவர்தன ; ஆனால் அவர் உண்மையாயிருப்பதைக் கண்ட எதையும், சனங்கள் விரோதமாகப் பேசுகின்றார்களே யென்று விட்டு விட்டவரல்ல. சனங்கள் இவருடைய புத்திவன்மையை முதலில் அறிந்தவர்களல்ல. அவர் ஓயாமல் ஒரே உறுதியாகத்தம் வேலையைச் செய்து தம்முடைய தீர்மானமே சரியான தென்று, இனிச் சந்தேகத்திற்கிட மில்லாதபடி திருஷ்டாந்தப்படுத்திக் காட்டினர்.

மற்ற வியாதிகளுக்குங் கிருமிகளே காரணமாகின்றன வென்பது.

கிருமியால் தொற்று வியாதி உண்டாகின்ற தென்னும் உண்மையைச் கண்டு வெளிப்படுத்தியது மிகவும் பெரிய விஷய மாகும், அதற்கு முன்னே பொருளாராய்ச்சி சாஸ்திரிகளுள் இரண்டொருவர் அக்கிருமிகளைப் பற்றிப் போதுமான நியாய மின்றி அனுமானித்தனர் ; ஆனால், பாஸ்டியூர் (Pasteur) பட்டுப் புழுக்களைச் சோதனை செய்த வரையும் வேறு எவ்விதமான வேலையுஞ் செய்யவேயில்லை.

உலகத்தில் இஃதொரு புதிய காட்சியும் உண்மையுமா யிருந்தது. பாஸ்டியூரும், அவரோடு வேலை செய்வதற்கு அவரிடம் பயின்றவர்களும் பட்டுப் புழுக்கள் சோதனை யோடு நிற்க வில்லை; ஆனால், மனிதர்களையும் மற்றப் பிராணிகளையும் பீடிக்கிற வியாதிகளுள் யாதேனும் அதேவித காரணமா யிருக்கக் கூடாதா வென்று ஆராய்ச்சி செய்ய நிச்சயித்தார்கள்.

உடனே பாஸ்டியூர் இவ்வாராய்ச்சித் துறையில் மிகு தீவிரமாக இறங்கினர். அவர் கண்ணுங் கருத்துமாய் ஒவ்வொன்றையும் முன்மாதிரியாகவே நிதானித்துச் சோதனை செய்து, தாம் எதனை யெண்ணியிருந்தனரோ அதனையே வெளிப்படுத்தினர். அதாவது, மனிதர்களிலும் மற்றப் பிராணிகளிலும் ஆகார மூலமாகவும், சுவாச மூலமாகவும் அல்லது பலவித காயங்கள் மூலமாகவும் கிருமிகள் உடம்பினுள் புகுந்து வியாதிகளை யுண்டாக்குகின்றன என்பதேயாம்.

அவர், ஒரு புதிய தேசத்தினுள்ளே புகுவதற்கு மரம், செடி, முள் முதலியவற்றை வெட்டிக் களைந்து சீர் திருத்தி வழியுண்டாக்கி முன் செல்லும் வழிகாட்டி (Pioncer) யைப் போல இருந்தனர் ; அன்றியும், அநேகம் பொருளாராய்ச்சி சாஸ்திரிகளும் அவரையே பின் பற்றினர்கள் ; இன்னும் அவர் சென்ற வழியே செல்லுகின்றனர்.

பட்டுப் புழுக்கள் விஷயமாகப் பாஸ்டியூர் உண்மைகாண்பித்த துபோலவே அநேக வியாதிகளுக்குக் காரணம் கிருமிகளே யாகின் றன வென்று, அவருக்குப்பின் அநேகம் பொருளாராய்ச்சி சாஸ்திரி களும் தங்களாராய்ச்சியினால் தெளிவாய்க்காட்டி யிருக்கின்றனர்.

கிருமிகளை எங்கே காணலாம் ?

இக்கேள்விக்குச் சரியான விடை "எங்குங் காணலாம்" என்ப தேயாம். அவற்றைக் காற்றிலும், எல்லாவித ஆகாரங்களிலும், நம் முடைய வாயிலுங் குடரிலும், பிராணிகள் வாயிலுங் குடரிலும், நம் உடம்பின் மேலும், உரோமங்கள் மேலும், நம்முடைய நகங் களிலும், சுவர், தரை, மேசை, நாற்காலி, உடை முதலியவற்றின் மேலும், நீரிலும், பூமியிலும், இன்னும் மற்ற விடங்களிலும், முக்கிய மாய் எல்லாவித தூசுகளிலுங் காணலாம். அவை யிருக்கு மிடங் களைச் சொல்வதினும் அவை யில்லாத விடங்களைச் சொல்வது மிகக் கடின மாகும். உயர்ந்தமலையின் உச்சியிலுள்ள காற்றில், சமுத்திர நடு வெளியில் அவற்றைப் பார்ப்பது மிக அருமையாகும் ; ஆனால், எவ்விடங்களிலும், சில சமயம் அதிகமாயும் சில சமயம் குறைவாயு மிருக்கலாம். முன்னே சொல்லி யிருப்பது போல, அவற்றுள் சில தீங்கு செய்வன அல்லனவாயும், சில உபயோக முள்ளனவாயும், சில பிராணபத்தைக் கொண்டு வருவனவாயு மிருக்கின்றன.

வியாதிக் கிருமிகள் பூரண சுகத்தோடிருப்பவர்களிலு மிருக் கின்றன. அவை பெருகுவதற்குச் சமயம் வாய்க்கும் வரையும், அவை நம்முடைய சரீரங்களுள்ளும் அல்லது உடம்பின் மேலு மிருக்கின்றன. நாம் எப்போதாயினும் நல்ல காற்றில்லாமலும், சரியான போஷண மில்லாமலும், மதுபானத்தினாலும், இளைப்பினா லும், இன்னும் பல விதத்தாலும் பலவீனப் பட்டோமானால் அப் போது அக்கிருமிகளுக்கு நோயை யுண்டாக்குவதற்குச் சமயம் வாய்க்கின்றது.

இராட்டை சம்பந்தமாக மூன்று பழமொழிகள் கிராமங்களில் வழங்கி வருகின்றன. "குறைந்த நேரத்தில் கொட்டை நூறு" என்பது ஒன்று. நூல் நூற்றல் ஒரு சிறந்த உபத்தொழில் என்ப தை இது விளக்குகிறது, முக்கிய ஜீவனோபாயத்திற்குரிய தொழி லில் ஈடுபட்ட நேரம் போக மிகுந்த நேரத்தை வீணாக்காமல் லாபத் துடன் செலவிடுவதற்கு இராட்டை சிறந்த சாதனம் என்பது இதன் கருத்து,

ஸ்நானம்

ஸ்ரீரங்கம், ஸ்ரீமான் தி. ரா. ஸ்ரீனிவாசன் எழுதியது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஒரு
இனிய பழமொழி. "நோய்க்கு இடங்கொடேல்" என்பது தெய்வப்
புலமைத் தமிழ் மூதாட்டியின் செவ்விய வாக்கு. "விரதம் கெட்
டாலும் சுகம் தக்க வேண்டும் என்னும் மூதுரையும் இதனையே வலி
யுறுத்துகின்றது. ஆரோக்கிய தேக முள்ளவனே அனைவராலும்
விரும்பப் படுவான். ஆரோக்கிய சரீரம் பெற்ற ஒருவன் தன் மனம்,
மொழி, மெய்களால் தான் விரும்பிய கருமம் எளிதில் முடித்துக்
கொள்ளும் ஆற்றல் உடையவனா யிருப்பன். அன்றியும் அவனே
தன் சுற்றங் கிளைஞருக்குத் தன்னா லியன்ற உபகாரம் செய்யக்
கூடும். அவனது தொண்டின் வழிப் பெறும் நன்மையையே "தாய்
நாடு"ம் எதிர் பார்த்து அவாவுடன் நிற்கின்றது. நோயாளியோ
தானும் ஏதும் செய்யாது தன்னைச் சார்ந்த மற்றையோருக்கும் இன்
னலை விளைக்கும் மாமிசப் பிண்ட மாவன். அவனைக் காண எவரும்
அருவருப்புக் கொள்வர். காசுண்டானால் அதற்காக வேனும் அவனைப்
பலர் அண்டிக் காத்திருப்பர். அவ்வாறின்றி அவன் வறிஞனாயின்
அவனை உற்றார் முதலிய யாவரும் தூசாகவே மதிப்பர். தரித்திர
னாய் நோயினின்றும் அவதிப் படுவதைப் பார்க்கிலும் பொன்றுதலே
மேலான தாகும். "சாதல் விளியா வரு நோயி னன்றால்" என்றார்
மேதையர் ஒருவர். நோயாளி தனிகனா யிருப்பினும் என்ன பயன்?
அவன் அதனா லெய்தக் கூடிய இன்பம் நுகர்தல் கூடாமையால் வறி
ஞனே யாகின்றான். ஆகவே நாம் அனைவரும் சுக சரீரிகளாய்
இலங்குவதற்கு இன்றியமையாதனவற்றை மேற் கொண்டு ஒழுகல்
வேண்டும்.

பழ வினையாலும் பாரம் பரியமாயும் வரும் பிணிகள் ஒழிந்த
ஏனையவை யாவும் "தமக்கு மருத்துவர் தாம்" என்னும் சிறுமொழி
யின் நுண்பொருளை ஓராது சுகாதாரக் குறைவான வழிகளால்
நமக்கு நாமே விளைவித்துக் கொள்ளுவனவே யாகும். நம் முன்
னோர்கள், நீடிய காலம் சுகவாசிகளாய் நம்மவர் இருக்க வேண்டும்
என்ற கருணையின் பேரில் வெளியிட்டுள்ள அனுட்டிக்க வேண்டுவன
வான பல முறைகளையும் நாம் கடைப் பிடிக்காது அவற்றை அலட்சி
யம் செய்து ஒழிதலே நாம் வருந்துவதற்குக் 'காரணமாகும். பகுத்
தறிவு கொண்டேம் எனப் பிதற்றும் மாந்தரே பல் பிணியாலும்
துன்புறு கின்றனர். ஏனைய மனிதனினும் மதியி லிழிந்த மிருகமாதி
அஃறிணை ஜீவ வர்க்கங்கள் வியாதி என்பதன் வாசனை சிறிது மின்றி
ஓடியாடிப் பறந்து திரிந்து களிப்புடன் காலங் கழிக்கின்றன. அவை
தாம் ஆயு ராரோக்கியம் பெற்று வாழ்வதற் கின்றியமையாதன வான
சாதனங்களைத் தமக்குத் தாமே தேடிக் கொள்ளும் இயல்பின

யுடையனவாய்த் திகழ்கின்றன. எங்ஙனேனும் நாம் விலங்கு, புள்ளாதிய ஜீவ வர்க்கங்கள் தம்மிற்றுமே நோய் கொண்டு வருந்துதலைப் பார்த்துளோமா? யான் இங்குக் குறிப்பதுமே யதேச்சையாய்க் காலம் போக்கும் அவற்றையே யல்லாது மானிடன் கைப்பட்டவை யன்றும். எனவே, இவ்வஃறிணை ஜீவர்கள் கூட மாந்தர் தமக் கில்லாத இவ்வருஞ் சிந்தாமணியைக் கைக்கொண்டு மிளிர்கின்றன. ஆதலால், நாம் நோயற்றோராய் வாழ உன்னின் நம் மூதாதையர் விதித்துள்ள முறைகளை மேற்கொண்டு அவற்றின்படி நடக்க முற்பட வேண்டும். தினசரிக் கடமைகளான சௌசம், ஸ்நானம், சந்தியாவந்தனாதி கிரியைகளை பொன்னே போல் போற்றிக் கடைப்பிடித்து நடக்க வேண்டும். காற்று, ஜலம், உணவு, ஆடை, சுற்றுச் சார்பு (சகவாசம்) இவை யாவற்றிலும் நாம் தூய்மையே பேணல் வேண்டும். வைகறைத் துயி லெழலும், சுறு சுறுப்பும், நம்மிடம் அமைய வேண்டுவது அத்தியாவசியம். அன்றாடம் தேகப் பயிற்சி இயன்ற அளவு செய்து வரவேண்டும். மற்றும், வைத்திய நூலாராய்ச்சி விளக்க முறைகளுக்கு மாறாக ஒரு பொழுதும் ஒழுகல் கூடாது. கடைசியாக, இக்காயத்தைக் கருணை மேலீட்டால் உவந்து நமக்களித்த சர்வேஸ்வரன் பால் பக்தி யுடையோராய்ப் பிறங்கவேண் ண்டும். இவற்றைக் கடைப் பிடிக்கும் ஒருவன் அவ்வாறே ஒழுகியும் வருவனேல் இம்மை, மறுமை இரண்டினும் ஏமுறப் பொலிவன் என்பது திண்ணம்.

இனி, மக்கள் தேகா ரோக்யர்களாய் இன்புற்று வாழ் வதற்கின்றி யமையாத பல கர்மானுஷ்டானங்களுள் நாம் இங்கு விவரிக்க விழைவது ஸ்நானம் என்பதைப் பற்றியே. "நீராட்டம்" என்ற இக்கருமம் யாவரானும் போற்றற் பாலதாகும். அழிவற்றதாய், ஜோதி ஸ்வரூபமாய் மிளிரும் நம் "ஆத்மா"வின் கோவிலான நம் மேனியைத் தமனியமே போல் காத்தல் வேண்டும். உடம்பின் அழகையும், வலிமையையும், ஆரோக்யத்தையும் பேணுவது ஜீவாத்மாவும், பரமாத்மாவும் போற்றப்படுவதே ஒக்கும். அவர் தம் ஆலயத்தைப் பாதுகாத்தல் அவருக்கு ஆற்றும் தொண்டே யன்றோ? ஆதலால் நமது தேகத்தை நாம் சுத்தமாய் வைத்துக் கொண்டு ஆரோக்ய லக்ஷ்மியை வரவேற்க வேண்டும். சரீரத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளற்கு "ஸ்நானம்" அத்தியா வசியமாகும். "புறந்தூய்மை நீரானமையும்" என்பது ஈண்டு உய்த்து உணரற்பாலது. ஸ்நானம் ஒன்றினாலேயே தேகத்தின் மீதுள்ள மலினம் யாவும் நீங்கும். சரீரத்திலுள்ள மயிர்க்கால்களினூடே வேர்வை ரூபமாய்க் கழியும் அழுக்குகளெல்லாம் இரத்தத்தினின்று யாதொரு தடையுமின்றி வெளிச் செல்லும் பொருட்டும், காற்று வீசுகையில் நம் உடலில் மீது வந்து பதியும் தூசுகள் நீங்கும் பொருட்டும் அனுதினமும் சரீரத்தை ஒழுங்காய்த் தேய்த்து ஸ்நானம் செய்தல் வேண்டும். நம் மூதாதையர் ஸ்நானம் செய்தலைப் பிரதி தினமும் இயற்றும் கடமைகளுள் ஒன்றாகக் கொண்டு சுக ஜீவிகளாய் வாழ்ந்து வந்தனர். த்ரி

கால ஸ்நானம் செய்வதை அவர்கள் மேற் கொண்டு ஒழுகிவந்தனர் என்பதும் பல வாயிலாகவும் அறியக் கிடக்கின்றது. ஸ்நானத்திற்குப் பிராதக் காலமே ஏற்றது என்பதை அவர்கள் எண்ணில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தனர். தற்கால ஆராய்ச்சிகளின் பலனாக அவர்தம் நுண்ணறிவு பலரும் வியக்கத்தக்கதாய்ப் பொருந்தியுள்ளது என்பது வெளிப்படா நின்றது. ப்ராதக் காலத்திலேயே ஜலமானது தோய் வோர்க்கு நன்மை விளைவிப்பதான சீதோஷ்ண ஸ்திதியோடும் பொருந்தி யுள்ளது என்பது கற்றுத் தேர்ந்த மேற்கு நாட்டினரின் தற்காலக் கூற்று. அதிகாலை நீராட்டத்தின் நன்மை 'காலைக் குளிக்குக் கடும்பசி யுண்டா நோய் போம்...' என்பதனால் இனிது விளங்குகின்றது. காலையி லன்றி மாலையில் குளித்தல் மத்திம பலனையே தரும். இனி, வெந்நீரிலே செய்யும் ஸ்நானத்திலும் தண்ணீரிலே செய்யும் ஸ்நானமே உடம்புக்கு அதிக உறுதியைக் கொடுக்கும். வெந்நீர் ஸ்நானம் அதிக இளைப்பைக் கொடுக்கும். தண்ணீர் ஸ்நானமோ மிகுதியும் சுறு சுறுப்பைத்தரும். முன்னையது பிணியாளருக்கே பொருத்த மானது. ஆகவே, வாலிபப் பருவமுடைய எவரும் தண்ணீரில் அதிகாலை ஸ்நானம் செய்தலை மேற்கொள்ள வேண்டும். முதியோராயுள்ளவர்கள் எவ்வளவு பேர் மிக்க வலிமையுடனும், எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல், சுறுசுறுப்புடனும், அதிகாலை ஸ்நானத்தின் பயனாக விளங்குவதை நாம் காண்கின்றோம். வைகறைத் துயி லெழுந்து, மணிவண்ணன் பாதாம்புயம் மனத்தாற் பரவிப் பின்பு காலைக்கடன்களான மல, ஜல விசர்ஜனாதிகளை முடித்துக் கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும். நீராடுதற்கு எப்பொழுதும் ஓடும் ஆற்று நீரே சர்வ சிலாக்யமானது. வாவி கூபம் இவற்றின் ஜலம் தேங்கும் தன்மைத் தாதலின் அத்துணைச் சிறப்பிற்றன்று. இயன்றவரையில் இவற்றின்கண் தண்ணீரை சுத்தமாய் வைத்துக் கொள்ள முற்படல் நன்று. ஆடைகளைக் செவ்வனே அழுக்கு நீங்கத் தோய்த்த பின்பு இடையில் உடை யொன்றைத் தரித்து ஸ்நானம் செய்ய வேண்டும். கோவணத்துடனும், வஸ்திரம் யாதொன்றும் உடுத்தாதவாறும் தண்ணீரில் ஸ்நானம் செய்யக் கூடாது. எப்பொழுதும் 'தலை முழுக்கு' ஸ்நானமே சிறந்ததானாலும், லௌகிகப் பிரவர்த்தியுள்ள பெரும்பாலோர் "கண்டஸ்நானமே" போதிய தாகக் கொண்டுள்ளார். இவ்வகை நீராட்டத்தால் விளையும் நன்மை தலை முழுக்கினால் ஏற்படும் நன்மையைப் போன்ற அவ்வளவு மேன்மை யுடைத்தன்றாயினும், தண்ணீரிலேயே தமது ஆக்கையை நனைத்தறியாதார் எய்தும் இடுக்கண்களை அண்டாது செய்யும் இயல்புடைத்தாதல் பற்றிப் பெரிதும் பயன்றரத் தக்கதா யிருக்கின்றது. சாவதானமாய், தேகம் பூராவும் நனையுமாறு ஆழ்ந்து நீராட வேண்டும். பின்பு முரட்டு வஸ்திர மொன்றினால் நன்றாய் உடம்பினை அழுக்கு நீங்கத் தேய்த்துக் கொள்ள வேண்டும். பின்பு சீயக்காய்ப் பொடியோ, அல்லது நறுமணங் கமழும் 'சோப்பு'க்களோ உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.

(பின்னையதைவிட முன்னதை உபயோகித்தலே சாலச் சிறந்ததாம்.) பெண்பாலார் நறுமஞ்சள் அரைத்துக் குளிக்க வேண்டும். இவ்வாறு செய்த பின்பு மறுபடி நீராடிக் கரை சேர்ந்து, ஜலத்தை இறுகப் பிழிந்து போக்கிய துணியொன்றினால் எங்கணும் உருவித் துடைத்துக் கொண்டு பின்பு உலர்ந்த வஸ்திரமோ அல்லது வீடுசேர்கிற வரையில் ஒட்டப் பிழிந்த ஈர வஸ்திரத்தையோ தரித்துக் கொள்ள வேண்டும். இவ்வகை நீராட்டத்தால் எய்தும் நன்மையினை முன்னமே சுருங்கச் சொல்லி விளங்க வைத்தாயிற்று. இதனால், அன்றன்றைய சூடு தணிந்து போவதால் உஷ்ண சம்பந்தமான வியாதிகளனைத்தும் அவனை நெருங்கா. சர்மமும் பொலிவுடன் பிறங்கும். இத்தகைய ஸ்நானம் சுமார் அரைமணி நேரத்திற்குள் செய்ய இயலுவதாகும். இவ்வாறின்றி வெகுநேரம் வரை திளைந்து விளையாடுவோர் நிச்சயம் ஜலதோஷம், சுரம் முதலியவற்றால் துன்புறுவர். இவர்கள் செய்கை குளிக்கப் புகுந்தும் சேற்றைவாரிப் பூசிக் கொள்ளுவோர் செய்கையையே நிகர்க்கும், மிகுதியும் ஆழமான இடங்களில் வெகு நேரம் தண்ணீரில் விளையாடக் கூடாது என்ற அரும் நுண்கருத்தை விளக்கிக் காட்டும் "நீர் விளையாடேல்" என்ற ஔவையின் செவ்விய வாக்கு சிந்திக்கத் தக்கது. எவ்விடத்தும் எக்காலத்தும் 'காக்கை முழுக்கு' யாதொரு பயனையும் தராது என்பதையும் கருத்தில் செவ்வனே பதிந்து கொள்ள வேண்டும். ஆகவே, சகோதர சகோதரிகள் யாவரும் நம் மூதாதையர் அனுட்டித்துப் பெறும்பேறு பெற்ற இவ்வகை ஸ்நானத்தினை இகழாது கடைப் பிடித்து ஒளியும், ஆரோக்கியமும், சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டு மென்பதையே நோக்கமாகக் கொண்டு இதனை வரைந்தனன்: இனி 'எண்ணெய் ஸ்நான'த்தின் பெருமையையும் அதனை இயற்றலான முறையையும் கழறப் புகுவாம்.

"எண்ணெய் ஸ்நானம்" நம் பாரத பூமிக்கே உரியது. இதன் விசேஷத்தினை "ஆரேக்கிய ஸ்நானம்," "மங்கள ஸ்நானம்" என்ற வடமொழிப் பிரயோ கங்களாலும், பண்டிகைகள் முதலான விரத விசேஷ தினங்களில் மேற்கொள்ளப் படுதலாலும் உணர்க. நம் முன்னோரின் தெளிந்த நோக்கமும், ஆழ்ந்த அறிவும் இதனால் நன்கு புலனாகின்றது. 'எண்ணெய்' என்பது எள்—நெய் என்ற வெவ்வேறு பதங்களால் 'னலமுன்றனவும் ணளமுண்டணவும், ஆகும் தநக்க ளாயுங்காலே' என்ற நன்னூல் சூத்திர விதிப்படி உண்டான ஒரு தொடர் மொழி. இதன் பொருள் எள்ளிலிருந்து இறக்கப்படும் நெய்ச் சத்து என்பதாம். எள்ளின் மகிமை அளவற்றது. திதி, தர்ப்பணம் முதலிய கருமங்களில் உபயோகப்படுவது எள்ளேயாகும். வைத்தியந்தேர் நிபுணரிடம் அதன் குணவிசேஷங்களைக் கேட்டறிக. இந்த எண்ணெயை, நல்லெண்ணெய் என்று தனிப்படப் பிரித்துக் கூறுவதுபற்றிய விசேஷம் உய்த்துணரற்பாலதும் சிந்திக்கத்தக்கதுமாம்.

இதனாலேயே மற்றைய எண்ணெய்களெல்லாம் இதனினும் கீழ்த்தரத் தனவே என்பது தொனிக்கின்றது.[1] இத்தகைய எண்ணெய் ஸ்நானம் வார மிருமுறை செய்தல் வேண்டும். இது பற்றியன்றோ தேரையரும் "வீறுசதுர் நாட்கொருகால் செய்முழுக்கைத் தவிரோம்" என்று கூறினர். அஃதாவது அவ்வவ்வாரம் புதன், சனிக்கிழமைகளில் எண்ணெய் ஸ்நானம் மேற்கொள்ளவேண்டும். மகளிர் பிரதி செவ்வாய் வெள்ளிக்கிழமைகளிலே இவ்வெண்ணெய் முழுக்கைச் செய்ய வேண்டும். வாரத்திற்கு இருமுறை யல்லாவிடினும் ஒரு தடவையேனும் எண்ணெய் தேய்த்து முழுக வேண்டுவது அத்தியாவசியம் என்பது குறித்தே ஔவையும் "சனி நீராடு" எனக் கழறினர். எண்ணெய் ஸ்நானத்தின் பெருமையையும், அவஸ்யத்தையும் "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு" என்ற உலக வழக்கால் அறியலாம். இவ்வெண்ணெய் முழுக்கால் விளையும் நன்மைகள் எண்ணிறந்தன. அவை சிரோஷ்ணத் தணிவு, கண்களின் ஒளி மழுங்காமை, சர்மத்தின் அழகு மிகுதல் ஆகிய இன்னும் இவை போன்ற பலவாம். ஆனால் இக்காலத்தில் பெரும் பாலார் இதனாலேற்படும் பெரும்பயனை அனுபவித்தவர்களாகக் காணப்படவில்லை. இதற்குக் காரணம், அதனில் அவர்கள் சில விதிகளை ஒழுங்கு பிறழச் செய்வதேயாம். எண்ணெய் தேய்த்துக் கொள்ளுகையில் நிதானமாக இருக்க வேண்டுவது அவசியம். (எவ்விடயத்திலும் எவ்விடத்தும் நிதானமே வேண்டற் பாலதாம்.) எண்ணெய்க் குளிக்குங்காலை ஒன்பது மணி நேரத்திற்குள்ளான காலமே சாலச் சிறந்ததாம். 'காலை எண்ணெய் கண்ணுக்கு; மாலை எண்ணெய் மண்ணுக்கு" என வழங்கலும் காண்க. அதிகாலை நீராட்டமே பெரும் பயனையும் இன்பத்தையும் பயக்க வல்லது. எண்ணெயை எப்பொழுதும் அப்படியே தேய்த்துக் கொள்ளலைக் காட்டிலும் சூடுற நன்றாய்க் காய்ச்சித் தேய்த்துக் கொள்ளலே உத்தமம். எண்ணெயைத் தைலபாகமாகப் பக்குவம் செய்து கொள்ளுவோரும் சிறிதேனும் சூடாகச் செய்து கொண்ட பின்பே உபயோகித்தல் நலம். இவ்வாறு காய்ச்சி எடுத்துக் கொண்டதைப் பின்பு "லிங்கத்திற்கு அபிடேக செய்வது" போல் பரக்கப் பரக்கப் மடமடவென்று தலையில் கொட்டிக்கொண்டு உடனே முழுகி விடுதல் கூடவே கூடாது. இதனால் விளையும் பயன் ஏதுமின்று. இனி, பிறரைக் கொண்டு அவர்கள் பலத்தையெல்லாம் இவர் தம்தலைமேல் தாளரூபமாக வெளியிட்டு அழுந்தத் தேய்க்குமாறு செய்தலும் கூடாது. ஏனெனில் இம்முறையில் தேய்ப்போனின் தேகச்சூடு தேய்த்துக் கொள்ளுவோனின் சிரசின் வழியே இறங்கி இன்னல் இழைக்கும். ஆகவே காற்றோட்டமுள்ள தலத்தில் தனியே வீற்றிருந்து சூடேற்றிய எண்ணெயை நமக்கு நாமாகவே அன்னியர் உதவியின்றி தேய்த்துக்கொள்ளலே மிகுதியும் நன்மை பயப்பதாம். உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை நிதானமாய்ச் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்துக்கும் சிறிதும் வெளியிடமின்றி நன்றாய் அழுந்தத் தேய்த்துக் கொள்ளவேண்டும். எண்ணெய் கீழே வழியுமவ்வளவு நிரம்பத் தேய்த்துக் கொள்ளலும்

கூடாது. 'எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்பதற்கேற்பத் தலையில் தேய்த்துக் கொள்ளலையே நாம் நன்கு கவனிக்க வேண்டும். உரோமக் கால்கள் ஒவ்வொன்றிலும் எண்ணெய் நன்றாய்ச் செல்லுமாறு தலைமயிரை விரல்களால் அப்போதைக்கப்போது கலப்பித்துக் கொடுக்க வேண்டும். இவ்வாறு தலைக்குப் பிரயோகம் செய்த பின்னரே அவயவங்களுக்குத் தேய்த்துக் கொள்ள வேண்டும். அவைகளில் நாம் முக்கியமாய் கவனிக்கற்பாலன கண், செவி, இடை, மூக்கு இவைகளே. இவற்றிலும் முன்னதிரண்டின் விஷயத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும். 'விட்டுக்செட்டது காது; விடாமற்கெட்டது சண்' என்பது ஓர் முதுரை. துண்டு. சிலர் செய்வதுபோல் காதுகளினுள் எண்ணெய் புகவிடல் கூடாது. காது மடல்களின் உட்புறம் வேண்டுமெனில் சிறிது தடவிக் கொள்ளலாம். காதுகளில் வெளிப்பக்கம் தேய்த்துக் கொள்ளலே போதும். கண்களுக்கு எண்ணெய்ப் பிரயோகம் மிகவும் முக்கியமானது. கண்கரிப்புத் தாங்கும் வரை கண்களில் பீழை சேரும் இடத்தினின்றும் ஆரம்பித்து மெதுவாய்க் கீழ் இமையை ஒட்டி மறுமூலைக்கு எண்ணெய் தோய்ந்த வலக்கை மூன்றாவது பெருவிரலை அழுந்த நகர்த்தி வந்து, பின் மேல் இமையை ஒட்டி ஆரம்பித்த இடத்திற்கு நகர்த்திக்கொண்டே வந்து பீழை எடுக்கிற விதமாய்ப் பல முறையும் உருட்டி உருட்டி எடுத்தவரின் கண்களில் நாள்கள் பலவாகக் காற்றினால் படிந்திருக்கும் கல், தூசி முதலிய மாசுகள் வெளியாகும். கண் எல்லாவித மஷ்டுக்களினின்றும் நிவர்த்தியாம். இம்முறையில் கண்கள் சிவந்து கரிப்பெடுத்து நாசியின் வழியே நீர் இறைக்குமானாலும் அவற்றால் தீமை ஒன்றும் இல்லை.

எண்ணெய் தேய்த்துக்கொள்வதில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய இம்முறைகள் தீர்ந்தவுடன் ஸ்நானம் செய்யும்' முறையைப்பற்றிச் சிறிது கவனமெடுத்துக் கொள்ளவேண்டும். ஸ்நானம் செய்யும் அறை நல்ல காற்றோட்டமுள்ள விடத்தில் வசதியாய் அமைந்திருக்க வேண்டும். அது தனிமையான இடத்திலும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். மண் தரை கூடாது. செங்கல்லினால் கட்டப்பட்டுப் போதிய வெளிச்சமும் காற்றுமுடையதாய்த் தண்ணீர் சிறிதும் தேங்கி நிற்காததாய் இருத்தல் அவசியம். ஸ்நானம் செய்வதற்கு வெந்நீரே வேண்டும். 'எண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம்' என்றே தேரையர் கூறினார். சீத ஜலத்தில் எண்ணெய் ஸ்நானம் தீமையே தருமல்லது நன்மை தராது. வெந்நீர் எப்பொழுதும் கை பொறுக்குமளவு சூடுள்ளதாகவே இருக்கவேண்டும். மிகுந்த உஷ்ணமும், தணிவான சூடும் உள்ள நீர் தகாது. எண்ணெய் தேய்த்துக் கொண்டு சிறிது நேர மேனும் ஊறவேண்டும். அதற்காக அதிக நாழிகை ஊறலும் கூடாது. சுமார் பதினைந்து நிமிடங்களே போதிய நேரம். எண்ணெய்த் தலையோடு வெய்யிலில் வேர்க்கும்படி நிற்கக் கூடாது. பின்பு வெந்நீரை ஒரு பாத்திரத்தில் மொண்டு தலையில் தணிவாகவும் ஒரே நிதானமாகவும் விட்டுக் கொள்ளல் வேண்டும்.

ஸ்நானம்

21035

ஒரு முழ உயரத்திலிருந்து நீரருவி வீழ்தலைப்போல் மடேர் எனக் கொட்டிக் கொள்ளக் கூடாது. இப்படி ஐந்து நிமிட நேரம் ஜலம் விட்டுக் கொண்ட பின்பு கண் கரிப்பு சிறிது சிறிதாக நீங்கிச் சிலு சிலுப்பு ஏற்படுவது அனுபவம். தண்ணீர் விட்டுக் கொள்ளுகையில் தலையின் மயிர்க் கால்களை விரல்களால் கிளறிக் கலப்பித்துக் கொண்டே இருக்கவேண்டுவதுந்தவிர, உடம்பின் எல்லாப் பாகங்களின் இடுக்குகளை யெல்லாம் துலக்கிக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு முக்கால் பங்கு நீர் இவ்வழியில் செலவிடப்படல் மேன்மை. ஏனெனில்,இதற்குள்ளேயே எண்ணெய்ப் பிசுக்கு ஏறக்குறைய சரீரத்தை விட்டு நீங்கிவிடும். பின்பு சீயக்காய் இலேசாகப் போட்டுத் தேய்த்து சரீரத்திலுள்ள மீதி எண்ணெய்ப் பிசுக்கு அழுக்கு முதலியவற்றை எஞ்சிநின்ற ஜலத்தால் நன்ருய்க் கழுவி விடவேண்டும். இதற்காகக் கூடுமானுல் சோப்பையும் உபயோகிக்கலாம். ஸ்நானம் முடிந்ததும் உலர்ந்த வஸ்திரமொன்ருல் நன்ருய் தலையைத் துவட்டுவதுந் தவிர உடம்பிலும் ஓர் துளி நீரேனும் தங்காதவாறு துடைத்து விடுதலும் வேண்டும். துவட்டி முடிந்ததும் தலைமயிருக்கும் சரீரத்திற்கும் சாம்பிராணி தூபமோ, மட்டிப்பால் புகையோ காட்டிப் பிடிக்கலாம். இதனுல் மயிர்கால்கள் பல முறும். உடனே தூய வஸ்திரம் அணிய வேண்டும். அன்று பகல் நித்திரை கூடாது. தலைமயிர் ஈரம் புலரும்வரை தளரவே நுனியில் மட்டும் முடியிட்டிருக்க வேண்டும். தலைமயிரில் ஈரந் தங்குமே யானுல் அதனுல் விளையும் பெருந்தீமைகள் பல. எண்ணெய் ஸ்நானம் செய்த அன்று மறுபடியும் எண்ணெய் தடவி தலை வாரிக் கொள்ளக் கூடாது. உலர்ந்த பின் சிக்கெடுத்து அப்படியே முடியவேண்டும். பின்பு தலை சீவிக்கொள்ளல் இரண்டாம் பட்சமே யாகும்.

இதுகாறுங் கூறிய முறைப்படி பிரதிவாரம் புதன், சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து முழுகும் எவனும் ஆரோக்கியவானுயிருப்பதில் எட்டுணையும் ஐய மிலது. மற்றைப்படி எண்ணெய் முழுக்குகள் எல்லாம் "காக்கை முழுக்கு" களே ஒழிய அவற்ருல் சிறிதும் பயனெய்த முடியாதென்பது திண்ணம். ஒரு மாதத்துக்கு இடையில் சரீரசம்பந்தத்தால் ஏற்படும் எல்லாவித உஷ்ணமும் இம்முறை ஒரே ஸ்நானத்தில் பறந்துபோம். ஆகவே, உஷ்ணசம்பந்தமான வியாதிகளனைத்தும் அவனை விட்டு அகலும். மேகரோக சம்பந்தமான கண்ணெரிச்சல், கண்ணினீர் வடிதல், கண்வலி, கண்மறைவு, கண்ணைப்பற்றிய இதர வியாதிகள் யாவும் அறவே நீங்கும். மறுபடியும் அவை இவனை அணுகா. நெடுங்காலம்வரை கண் ஒளி சிறிதுங் குன்ருது அதனு லெய்தலான பெரும் பயனைப் பெறலாம். அன்றியும், காது மந்தம் முதலியனவும் நேரா. தோல் மென்மையும் பளபளப்பு முள்ளதாய்ப் பொலியும். மயிர்க்கால்களின் துவாரங்கள் எப்போதும் திறந்தே யிருக்கு மாதலின் வேர்வை தாராளமாய் வெளிப்பட உள்ளழுக்கு நீங்கி இரத்த வோட்டம் சுத்தமுறும், பரி

சுத்தமான இரத்தமே மக்களுக்குப் பிராணதார மன்றோ? தலைமயிர் வளர விரும்புவோர் அன்றாடம் அதிகாலையில் எண்ணெய் தடவி தலையைச் சீவி முடிந்து கொள்ளின், கூந்தல் ஆலம் விழுதுபோல் உறுதியாய் மேன்மேலும் கரியதாய் வளர்ந்து வருதலைக்காண அளவிலாப் பேரின்பம் எய்துவது அனைவரும் அறிந்ததே. தாதுபுஷ்டிக்கேற்ற சிறந்த மருந்து பிறிதொன்று இம்முறை வேறே வழி எண்ணெய் ஸ்நானத்தைத் தவிர இருப்பதாய்க் கருதி வீணே அலைய வேண்டாம். சுருங்கக் கூறின் இம்முறை முழுக்கின் பலன் அவரவர் அனுபவத்திலேயே அறியத் தக்கது.

எண்ணெய் தேய்த்துக் கொண்ட மறுநாள் குளிர்ந்த நீரிலேயே ஸ்நானம் செய்யவேண்டும். குளிர்ந்த ஜலத்தில் அதிகாலையில் எழுந்து முழுகலும் இவ்வெண்ணெய் ஸ்நானமுறை யளிக்கும் பலனை யளிக்க கூடியதே. தமக்குப் பின் வருவோர் பிரதி தினமும் தண்ணீரில் முழுகார் என்பதை அறிந்தே நம்முன்னோர் இத்தகைய அரும் பெரும் முறையை நமக்குத் தந்து உதவினர். ஆகவே, நாம் அனைவரும் இம்முறையினைச் சரிவர அனுட்டித்து ஆயுள், ஆரோக்யம், வலிமை, அழகு முதலியன மிகுத்த சரீரமுடையோராய் இலங்க முயல்வோமாக! ஆழியங்கையன் அருள் சுரப்ப நாம் அனைவரும் அவனது இணைக்கமலம் மனமாரப் போற்றி வந்திப்போமாக. "லக்ஷ்மி" கடாட்சம் நமக் குறுமாக! கற்றுங் கறிந்தடங்கியோர் "நீரொழியப் பாலுண் குருகினை" யொத்து இச்சிறு வியாசத்தின்கண் உள்ள தீயவை விலக்கி நன்மை கடைப்பிடித்து அருளுமாறு வேண்டுகின்றனன். பொங்கும் மங்களம் எங்குந் தங்குக!

ஓம் தத் ஸத்.

பெருநிலக் கிழவர்.

அரசர் பிறந்த நாளன்று இங்கிலாந்தில் ஸர்ப் பட்டம் பெற்ற சிட்னி கிட்மான் என்பவருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் எல்லோரையும்விட ஏராளமான நிலங்கள் உண்டாம். இவருக்கு மூன்று கோடியே இருபது லட்சம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இரண்டரை லட்சம் ஆடு மாடுகள். பல ஆயிரம் குதிரைகள். இவரைப் பெரிய வேளாள ரென்று சொல்ல வேண்டும்.



காலஞ் சென்ற சுப்பிரமணிய சிவம்.

அறிவின் பயன்

(292-ம் பக்கத் தொடர்ச்சி.)

III—மக்கட் டோகுதி.

மனிதருக்குக் கொடுமையான சத்துருக்கள் மடமையும் மூட நம்பிக்கையுமே ; இவைகளை வேரறுத்து கிளைத் தெறிவதற்குரிய கூரிய ஆயுதங்கள் உண்மையும் பகுத்தறிவுமே........ ஹேக்கேல் (Haeckel).

1. நூலின் இலக்கணம்:—. முற்காலத்தும் தற்காலத்தும் இவ்வுலகத்தே காணப்படா நின்ற மக்கட் பரப்பின் சரீர அமைப்பையும் மனோ நிலையினையும் விரிவாய்க் கூறுகின்ற உயிர் நூலின் தொகுதியை 'மானிட சாஸ்திரம்' அல்லது (மக்கட் தொகுதி) எனக் கூறலாம். உலகத்தின் எந்தப் பாகத்தில் மனிதர் உற்பத்தியாயினா ரென்றும், அவ்விடம் நின்று ஏகிய பாகங்களும் மார்க்கங்களும் எத்தன்மையவென்றும் அவர்கள் தன்மையும் நாகரீகமும் அபிவிருத்தியும் அவர்கள் பரிபக்குவ மடைந்த விதமுங் கூறித் தனது ஆஞ்ஞா சக்கிர அபிவிருத்தியின் பயனாக உலகம் முழுவதற்கும் ஏகநாயகனாய் அறிவையளிக்கின்ற விதமுங் கூறுவதும் இந்நூலின் பொறுப் பென்று கூறுவாறுமுளர்.

முன் வியாசத்தில் உயிர்நூலின் பொது விதிகள் விரிவாய்க் கூறப்பட்டிருப்பதாலும் இம்மானிடநூல் உயிர் நூலின் தொகுதியாதலாலும், மக்கட் டொகுதியின் உற்பத்தியையும் அவைகட்கும் இதர பிராணிகளுக்கு முள்ள தொடர் நிலையையும் சங்கேத மொழிகளின்றிக் கூற வேண்டு மென்பதே எமது நோக்கம்.

2. ஜீவிதப்போர் :—ஒவ்வொரு நாளிலும், மணிக் கூறிலும் நிமிஷத்திலும் உலகெங்கும், பிராணிகள், தாம் ஜீவித்திருப்பதின் பொருட்டுப் போர்கள் நடத்துகின்றன. புற் பூண்டுகள் தொட்டு பிராணிகள், மனிதர்கள் வரையும் தாம் வாழ்ந்திருக்கும் பொருட்டுத் தம்மிலும் சக்தி குன்றிய பிராணிகளையோ, பூண்டுகளையோ, இதர

தாவர ஜீவித வர்க்கங்களையோ உட்கொண்டு, அல்லது கொன்று தின்று வாழ்கின்றன. தன்னைக் காப்பதற்கும் தனக்கு அபாயம் வராமல் தடுப்பதற்கும் வேண்டும் அங்கங்கள் இயற்கையாய் ஒவ்வொரு பிராணியினிடத்தும் அமைந்திருக்கின்றன. தன்னைக் காப்பதற் கமைந்துள்ள நுட்ப ஆயுதங்களும், அவைகளை உபயோகிக்கும் விதங்களும் உற்று நோக்கு வாருக்கு மிகுந்த அதிசயத்தையும் ஆலோசனைக் கிடமுந் தருகின்றன. என்றும் நிகழ்கின்ற இப் போராட்டத்தில், பல்லாண்டுகளாய்ப் பல யுகங்களாய்ப் பலங்குன்றியவைகளை மாய்த்துத் தான் வாழும் பிராணிகளிலும் பலவாறு மாய்ந் தொழிந்தன போக, இன்னும் நாம் கண்டு களித்து ஆனந்திப்பதான பிராணிகளும் அளவிடற் பாலதோ? அவைகளின் தொகை தான் இன்னும் நிர்ணயிக்க லாயிற்றோ? மாய்ந் தொழிந்தன போக உயிர்த்திருக்கின்ற கிருமிவர்க்கங்கள், நகரும் ஜெந்துக்கள், ஊர்ந்து செல் பிராணிகள், மீன்வர்க்கங்கள், நீர் நில வாழ்விகள், பறவை யினங்கள், நாற் கால் மிருஹங்கள், வல்லின மரபுகள் இவைகள் எண்ணிற் கடங்குமோ? விசேடமாக மனிதனுக் குபயோகமான பிராணிகள் வெகு சுருக்க மென்றும், துன்பத்தையும் அபாயத்தையும் தொத்து வியாதிகளையும் விளைவிக்கின்றவைகள் பெரும்பான்மை யாமெனவும் அறியற்பாலது.

மூலப் பிராணிகள்:—உயிர்நூலிற்கு ஆதாரமாயுள்ள சாத்திர நிபுணர்கள் 'பிராணிகள் வகுப்பில்' பிராணிகள் பன்னிரு மூல ஜெந்துக்களினின்றுண்டாயின வென்றும், அவைகள் அறுபது வகுப்பாகவும் அவ்வறுபது வகுப்பினின்றும் மூன்னூறு வர்க்கங்கள் தோன்றியிருக்கின்றன வென்றும் அவையனைத்திலும் மிகச்சிறந்தது மானிட வகுப்பென்றும் கூறுகின்றார்கள். நீடித்த காலமாய் அறிவொன்றை நாடியே தமது வாழ் நாட்களைச் செலவு செய்து வந்த ஜீவிதநூலார் பரிசோதனைகளையும் நுட்பக் கருவிகளினால் கண்டு பிடித்து பஹிரங்கமாய் யாவரும் தானே கண்டு களிக்குமாறு பிரசுரஞ் செய்திருக்கின்ற பூர்வீக தற்கால சிசு நூற்களையும் ஆராய்ச்சி செய்வோமானால் முதுகெலும் போடும் சிறந்த பகுத்தறிவோடும் காணப்படும் இம்மனிதன், உயிரல்லாதனவாகிய புழ் பூண்டுகளிலும் கேவலமா யிருந்து, பற்பல படிகளில் தவழ்ந்து, தேர்த

லடைந்து, அனேக அவயவங்கள் சிதைந்தும் சீர் பெற்றும், தேர்ந்தும் தெளிவுற்றும் பரிணும விதி யனுசரித்து அபி விருத்தியைப் பெற்றும், என்றும், இன்றும், மாற்ற தேற்றங்களை யுடைத்தாய் வாழ்வது நன்கு புலப்படும். சமயாசாரியர்களில் சிறந்த மாணிக்கவாசகர் பாடிய பாடலில் அமைந்துள பொருளும் இதற்குப் பொருத்தமாயிருப்பதைக் காண்க :—

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதாரய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.

1500 வருடங்களுக்கு முன்னே, தற்கால, சாஸ்திர விதிகளையும் பரிணுமக்கொள்கைகளையும் சார்ந்திருக்குமாறு பாடிநின்ற அம் மஹான் எவ்வளவு பெரியோராய் எக்காலத்தும் மதிக்கப்படல் வேண்டும் !

நமது மூலபிராணிகள் ஒன்றல்ல இரண்டல்ல ; பல வகுப்புகளினின்றும் பல அவயவங்கள் பெற்ருேம் ; பலவித புலனறிவைப் பொருந்திேனும். சுருக்கிக் கூறுமிடத்து, நமது மேற்ருேலும் உரோமமும் இரைக்குழலும் நகரும் ஜெந்துக்களிடமிருந்தும், நரம்பும் தசையும் சலனமும் உளர்வனவைகளிடமிருந்தும், இருதயமும் இரத்த ஓட்டக்கருவிகளும் ஓர் வித மீன் வர்க்கங்களினிடமிருந்தும், பாதமும் பாதவிரல்களும் நில் நீர் வாழ்வனகளிடமிருந்தும், கைகால்களும் முகவாய்க்கட்டும், ஓர் வித மீன்களிடமிருந்தும் 'உருசி' என்ற சுபாவத்தைப் பாம்பினங்களிடமிருந்தும், சிசுக்களுக்குப் பால் சுரக்குந்தன்மையை ஓர் பழமையான வல்லினமரபில் இருந்தும் பெற்று வாழ்கின்ருேமென—உயிர் நூலார் தக்க சான்றுகளுடன் கூறுகின்ருர்கள். பிராணிகள் யாவும் தொன்று தொட்டுத் தொந்த பந்தமுடைய ஓர் தொடராகவே காணப்படுவதால் இவைகள் சரீரக்கட்டில் ஒரு பொது விதியை யனுசரித்து உற்பவமாயின வெனக் காண்பது எளிதே.

அறிவின் பயன்

வல்லினம் முன்னினம் :—நடு நிலையினின்றும் என்றும் தவருதபடி பரிசோதனைகள் நடத்தி அறிவை, உயிர் நூலின் கொள்கைகளை அளித்த ஹக்ஸிலி அவர்களின் விதியின்படி (Huxleian law) மனிதனுக்கும் உயர்தர வல்லினங்களுக்கும் அமைந்துள்ள அங்க உறுப்புகளின் வித்தியாசங்கள் உயர்தர வல்லினங்களுக்கும் தாழ்ந்த வகுப்பு வல்லினங்களுக்கும் அமைந்து காணப்படும் வித்தியாசங்களைப் பார்க்கிலும் மிகவும் குறைவானவைகளாகவே காணப்படும் என நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. கெர்ப்பப் பையினுள் சிசுப் பருவத்தில் வல்லின வகுப்பிலுள்ளவை கட்கும் மானிடசிசுக்கட்கும் பெரு வித்தியாசங்கள் காணப்படவில்லை—பழைய உலகமாகின்ற ஆசியா ஆபிரிக்கா கண்டங்களி லுண்டாயிருந்த ஓர் வல்லின மரபிலிருந்தே ஆதிமனித னாகிய குகைமனிதன் உண்டாயிருக்க வேண்டும்.

ஜீவிதநூல் வல்லாரின் தெளிவான பரிசோதனைகளினாலும், அனேக யுகங்களின் முன் ஓராயிர நூற்றுண்டுகளுக்குமுன், ஓர் வீத மூலப் பிராணியினின்றும் இரு பிரிவாகிய பிராணிகள் வித்தியாசமுடைப் உற்பவித்தன வென்றும், ஒரு பிரிவினின்றும் வாலில்லாத குரங்கினங்களும், மற்றப் பிரிவினின்றும் ஆதிமனிதர்களும் தோன்றியிருக்கவேண்டுமென நிரூபிக்கப்பட்டிருக்கிறது—தேச சரித்திரங்களோ, பௌமிய நூல்களோ, இன்னதென அறிவதற்குரிய பரிபக்குவ மடைவதற்கும் வெகு காலத்திற்கு முன், பகுத்தறிவைக் கொடுக்கும் விவேகம் உண்டாவதின்முன் மனிதன் தன் அபிவிருத்தியின் பொருட்டுச் சரீர அமைப்பிற்கும், இதர பிராணிகளைத் தாக்கி வாழ்வதற்கும் புரிந்த ஜீவிதப்போரும் அப்போர்களினால் நிகழ்ந்த மாற்ற தேற்றங்களையும் விகற்பங்களையும் உற்று ஆராய்வோமாயின், அவ்வாராய்ச்சி மிகுந்த ஆச்சரியத்தையும் குற்றமற்ற மகிழ்ச்சியையும் நமக்குத்தரும் என்பதில் சந்தேகமில்லை. அக்காலத்தே மனிதர்களும் மந்தியினங்கள் போலவே, ஆசியா ஆபிரிக்கா கண்டங்களில் கூட்டங் கூட்டமாய் ஆயிரக்கணக்காய், பல இடங்களில் இரைதேடியுண்டு வாழ்ந்து வந்தார்களெனவும், அவர்கள் வாழ்ந்து போற பல பாகங்களின் தட்டவெட்ப நிலையினையும், முயற்சியினையும், பூமியின் பரப்பையும், சூழ்ந்திருந்த இதர பிராணிகளின் கருமங்களினாலும்,

ஒவ்வொரு கூட்டத்தாரும் பல வேறு மாற்ற தோற்றங்களையுடையோ ராய்க் காணப்படா நின்றனர். ஒரு கூட்டத்தார் இன்னொரு குழுவி னரைத் தாக்கி மாய்ந்தோ, வெற்றிபெற்றோ ஏற்பட்டன வாகிய விகற்பங்களும் பல உள. இவ்வாறே பல பிரிவுகளும் ஏற்பட்டு உல கெங்கும் பரவி அடைந்த விகற்பங்களினால் ஓரினத்தார் இன்னொரு வரைத்தாழ்ந்தோர் உயர்ந்தோர் என மதிப்பதற்குரிய காரணங்கள் தட்டவெட்ப நிலையினாலும், பூமியின் பரப்பினாலமைந்த வித்தியாசங் களினாலுமே யாகும்.

"ஆனால் ஒருவித வாலில்லாக் குரங்கினின்றோ மனிதர் உற்பத்தி யாயினர்! கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளில் தன்னைப் போல வன்றோ மனிதனைப் படைத்துத் தனக்கு வணக்கத்தையும் பக்தியையும் அளிக்கும் பொருட்டே உலகில் மனிதரை அமைத்தார் எல்லாம் வல்ல சர்வேஸ்வரர்! அதைத் தருக்கித்துக் கூறுவதும் சமய உணர்ச்சிக்குப் பொருந்துமோ? சிருஷ்டியின் சிரேஷ்டத்தை சமுசயமென் றெண்ணவுந் தகுதியோ?" எனப் பலவாறு கூறு கின்ற சமயவாதிகள் பலர் மேற் கூறியவைகளை மிகவுந் தப்பென்பார் கள். கடவுளின் திருவுருவத்தினின்றே நாம் ஓரம்சமாய்த் தோன்றி யிருக்கின்றோமெனவும், அவரது ரூபத்தைப் பொருந்தியே படைக் கப் பட்டிருக்கிறோமெனவும் பெருமை பாராட்டிக் கூறிக் கொண் டிருக்கிற மஹான்களை எதிர்த்துக் கூறுவது பெரும்பாவம் என்று அவர்கள் கருதுவாராயினும், அவர்களிடமும் தாழ்மையுடன் தெரிவிக்க வேண்டும் வார்த்தை ஒன்றுண்டு:—பூர்வீகந் தொட்டே குரங்கி னத்தின் எலும்புடம்பையும் மனிதரின் எலும்புடம்பையும் பரிசோதனை செய்து பார்க்கும் பொழுது, ஒரே தன்மையான 200 (இருநூறு) எலும்புகளாலேயே மானிடவர்க்கமும் வல்லினவர்க்கமும் அமைந் திருப்பதாய்க் காணப்படுகின்றது; இரு வகுப்பாளருக்கும் சலனத் திற்கும் அசைவதற்கும் உரித்தான 300 (முன்னூறு) தசைகளும் ஒரே தன்மை யுடையவைகள். மேலே காணப்படுகின்ற உரோம சரீரமும், இரத்தமும், இரத்தத்தில் காணப்படும் இருவிதச் சிறு முட்டைகளும், இரத்த ஓட்டத்திற் காதாரமாயுள்ள ஹிருதய மும், இரண்டு வகுப்பினருக்கும், ஒரே தன்மை யுடையனவை தான்; இஃதுடன், கொப்பமாவதிலும், கொப்பத்திலுள் சிசுக்கள்

போஷிக்கப் படுவதும், சிசுக்கள் வெளித் தோன்றுவதும் ஒரே தன்மையே; ஆகவே வல்லினங்களுக்கும் மக்கட் தொகுதிக்கும் மூதாதாவா யுள்ளவைகள் வல்லின மரபினரே யென்ற கொள்கை தப்பன்று.

ஆத்மஞானம்:—சரீரக் கட்டிலும் அங்கவியல்பிலும் மக்கள் குரங்கினங்களைப் போலக் காண்போ மாயினும் "ஆத்மா" வென் பதை மனிதரிடமின்றி வேறெப்பிராணிகளிடத்துக் காண முடியும்? ஆத்மாவும் அபிவிருத்தியாக முடியுமோ? ஆத்மா நமதுடலில் அமை வதற்கு நாமெடுத்த ஜென்ம மெத்தனை? கேவலமான ஓர் குரங்கி னின்று ஆத்ம ஞானமுடைய சத்தியம் தவறாத ஓர் உத்தம மனிதன் தோன்றுவதும் எண்ணற்பாலதோ, நம்பற்பாலதோ? நாமறியோம்; ஆத்மா விற்கும் அழிவு தேய்வுண்டோ எனப் பல கேள்விகள் கிளம் புவதும் இயல்பே. அவைகளுக்கும் விடை பகர்வது அவசியந்தான். மானிட சிசுக்கள் கெர்ப்பத்தில் உற்பத்திகாலம் முதல் இளம் பருவம் அடைவது வரையும் குரங்கினங்களின் சிசுக்களுடைய தன் மையைப் பொருந்தி யிருக்கின்றன. விவே கத்தையும் பகுத்தறி வையும் மக்கட் தொகுதியினும் அப்பொழுது காண வியலாது. சரீ ரத்துடனேயே அறிவும் முதிர்ச்சி யடைகின்றது. அறிவும் மிகுந்து கற்பன கற்று 'கற்றறிஞர்' எனப் பெயரெடுப்பதற்கு எவ்வளவு பிராயமாக வேண்டும்.

'மொழி' 'பாவை,' 'பேச்சு,' இவைகள் ஒழிய வேறெவ்விதத் தொழில் செய்வதிலும், ஏவிய தொழில் புரியவும், சாமான்களைப் பாது காத்து வைப்பதற்கும், மற்றனேக குணங்களிலும் மனிதரின் திறமையுடைய உயர்தர வல்லினங்கள் அநேகங்களை இன்னும் அமெ ரிக்காவில் காணாலம். ஊர்வன, நகர்வன வர்க்கங்களைவிட மீனினங் களும், மீனினங்களைவிடப் பறவை பட்சிகளும், பறவைகளை விட முது கெலும்புடைய விலங்கினங்களும் வரவர அறிவு மிகுந்திருப்பதை ஆராய்ந்தறிவோம். முது கெலும்புடைய வர்க்கங்களிலும், நாயும் குரங்கும் எவ்வளவு சிறந்த அறிவோடு காணப்படுகின்றன? கடைசி யாக மனிதர் குரங்கினங்களில் முதல்தரமான விசேட அறிவு பெற்று அறிவுடையோரென இலங்கி நிற்பதும் ஓர் அதிசயமல்ல. சரீர அங்க அமைப்பும் உள் அவயவங்களும் ஐம்பொறிகளும் பல்

லாண்டு பலவாறு அபிவிருத்தி யடைந்ததற் கொப்பாக முன்னறிவும் பல யுகங்களாய் அதிசயிக்கும்படியான முதிர்ச்சியும் விவேகமும் பெற்று பல மாற்றங்களையும் சீர் திருத்தங்களையும் பெற்றுக் காரிய காரணங் கூறிக் காரியங்கள் நடாத்துந் தன்மையடைந்ததென நம்பத் தக்க உதாரணங்களுடனும் பரிசோதனைகளினுலும் தற்கால சாஸ்திர நிபுணர்கள் தெளிவிக்கிருர்கள்.

தேனீக்களையும் எறும்புகளையும் பற்றி பிரிட்ஸ் முல்லர் (Fritz Muller) ஆவ்பரிப் பிரபு (Lord Avebury) இவர்கள் வெகு சிரமத்துடன் ஆராய்ச்சி செய்து பிரசுரஞ் செய்திருக்கும் நூல்களை வாசிக்கு மிடத்து, அப்பிராணிகளின் அறிவும் விவேகமும் கூட்டுறவும் மனிதனை விடக் குறைந்தனவாகக் காணப்படவில்லை. அவைகளின் சமுதாயக்கட்டும், தொழில் வேற்றுமையும், ஆகாரத் தேட்டமும், தன்னினத்திற்கு அபாயம் வராமல் சைன்னியம் வைத்திருப்பதும், பிற விசேட குணங்களும் நமக்கு மிகுதியும் வியப்பையும் களிப்பையும் தருகின்றன. இப்பொழுதும் சில பிராணிகளிடத்து சில குணங்கள் மனிதனை விடச் சிறப்புப் பொருந்தியதாய்க் காணப்படுகின்றன. நாய், நரி, குதிரை இவைகளிடத்தில் அனேகம் சிறந்த குணங்க ளுள். நாயின்றி வேட்டையிற்புகும் சிரேஷடர்களுக்கும் அபாயமுண்டென நன்கறிவோம்.

மேற்கூறிய காரணங்களினுலே, சரீரம் வேறு, ஆத்மா வேறு என்று பிடிவாதஞ் செய்கின்ற துவிபாதக் கொள்கை சாஸ்திரீக ஆராய்ச்சியினுல் பொருத்தமுடையதாய்க் காணப்படவில்லையென்றும் சரீர உறுப்புகள் அபிவிருத்தியடைந்த மார்க்கத்திலேயே ஐம்புலனறிவும், பகுத்தறிவாகின்ற ஆறறிவும் பக்குவ மடைந்தன வென்றும் சாஸ்திர நிபுணர் ஹெக்கல் (Haeckel) தக்க சான்ருேடு கூறுகின்ருர். மனிதன் இயற்கை அமைப்புக்குட்பட்டவனே; இயற்கையினின்றும் மேற்போனவ னல்ல; அது பற்றிப் பொருள் வேறு புலன் வேறு என்று பிடிவாதஞ் செய்வது பொருத்தமற்றதே; பொருளின்றிப் புலனும் புலனின்றிப் பொருளும் இவ்வுலகத்தே தனித்து நிற்க முடியாதென்றும் கீதே. (Gocthe) என்ற தத்துவ ஞானி கூறுகின்ருர்.

சிசுநூல். மக்கட் பரப்பின் பாகமாகின்ற அவைகளின் உற்பத்தியையும் அவைகள் கெர்ப்பத்தினுள்ளே கிருமி ரூபத்தினின்றும் சிசுவாய் வளருந் தன்மையையும், அவைகள் வளர்வதற்குரிய ஆகாரம் பெறும் மார்க்கமும் ஆராய்ச்சி செய்யும் பொழுது வல்லின மரபின் சிசுவுற்பத்தியைப் போன்றதாகவே காணப்படுகின்றன தேவர்களுக்கு அடுத்த படியே நமக்குரித்து என்ற சமயவாதக் கொள்கை சாஸ்திரீக ஆராய்ச்சிக்குப் பொருத்தமா யிராது. கெர்ப்பத்தினுள்ளே மனித சிசுக்கள் அதிவிரைவாய் வளர்ந்து வரும் பக்குவங்களை அடியிற்கண்ட படத்திற் காண்க. இதே தன்மையாகவே வல்லின மரபுகளும் வளர்ந்து வருவதாய் நன்றாய்ப் பரிசோதனை செய்தறியக் கூடும்.



II.	இரண்டு வாரமாகிய சிசு		VI.	ஆறு வாரம்	சிசு
III.	மூன்று வாரம்	,,	VII.	ஏழு வாரமாகிய	,,
IV.	நான்கு வாரம்	,,	VIII.	எட்டு வாரம்	,,
V.	ஐந்து வாரம்	,,	XII.	பன்னிரண்டு வாரம்	,,

XV

XV. பதினைந்து வாரம் சிசு

இதிலும் பன்னிரண்டு வாரமே திகைந்த சிசுவானது கெர்ப்பப்பையினுள் காண்கின்ற விதமும் ஆகாரம் பெறும் மார்க்கமும் அடியிற் குறித்த படத்திற் காண்க.

முடிவுரை:—மேற்கூறிய காரணங்களினாலே மக்கட்பரப்பின் மூதாதையர் வல்லின மரபினரே யென்றும் மனிதரைப்போல இதர பிராணிகள் ஒவ்வொன்றும் இபற்கை யமைப்பினுள் சார்ந்தவைகளே யென்றும் நன்கு புலப்படும். மக்களின் தொகுதியைப் பற்றிய இந்தச் சிறு வியாசத்தில் சாஸ்திரீக நிபுணர்களால் விசேடமாய்க் கருதபவைகள் இடம் பெறாமலும், அவ்வாறு கருதப்படாதவைகள் இடம் பெற்று மிருக்கலாம்—சங்கேத மொழிகளொன்று மின்றி சாதாரண யௌனர்களுக்கும் வாசித்து யூகிப்பதற் குரிய ஓர் தூண்டு கோலாக வே, இவ்வுரை மதிக்கப்படல் வேண்டுமேயன்றி, நூலின் முக்கிய திருஷ்டாந்த விருத்தாந்தங்களுடன் எடுத்தோதுவற் கன்று. ஆயினும் இந்நூலை நன்குணர்ந்து எல்லோரும் இன்புறுமாறு உயிர் நூலைத் தமிழில் புத்தக ரூபமாய் வெளிப்படுத்தும் நண்பர்களுக்கு என்றும் எனது நன்றியும் வந்தனமும் உரியதாகும்.

தொடரும்.

விநோதக் குறிப்புகள்.

வாடின புஷ்பம் மலர்தல்.

சிலர் வீடுகளில் மேஜைமேல் அலங்காரமாகப் பூங்கொத்துகளை வைப்பதுண்டு. இந்தப் புஷ்பங்கள் வாடிப்போனால், எறிந்து விடுகிறார்கள். மேலும் வெளியூரிலிருந்து வரும் புஷ்பங்களைக் கட்டியனுப்பும் போது வேண்டிய அளவு ஜலம் தெளிக்காததால் அவைகள் வாடி யிருப்பதுண்டு. இவைகளை வெகுவாய் உபயோகிப்பதில்லை. வாடின புஷ்பங்களை எறிந்து விடாமல் சில உபாயங்களால் புதியவைபோல செய்து மறுபடியும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புஷ்பம் அல்லது புஷ்பக்கொத்தின் அடிக்காம்பில் சிறிதளவு நறுக்கிவிட்டு, மிகுந்த சூடான (ஆனால் கொதித்துக் கொண்டிராத) ஜலத்தில் புஷ்பங்களின் காம்புகளை வைக்கவும். அரைமணி நேரங் கழித்து ஜலம் நன்றாய்க் குளிர்ந்து போனவுடன் புஷ்பங்கள் அன்று மலர்ந்தன போலிருக்கும். இவைகளைக் கொஞ்சம் சுத்த ஜல முள்ள பாத்திரத்தில் வைத்திருந்தால் வெகு நேரம் கெடாம லிருக்கும். அந்த சுத்த ஜலத்தில் ஸோடா மா ஒரு சிட்டிகை சேர்த்தால் புஷ்பக் காம்புகள் ஸோடாவின் உதவியால் ஜலத்தை இழுத்துக்கொண்டு புஷ்பத்தை வாடாமல் காப்பாற்றும்.

உலகிற் சிறந்தவை.

உலக யாத்திரை செய்யும் அமெரிக்கர் சிலர் சில காலத்திற்கு முன் இலங்கையைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்றனர். அவர்கள் தங்கள் நாட்டிற்குச் சென்று தாங்கள் கண்ட விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைகளில் எழுதி யிருக்கிறார்கள் :—தீவுகளில் அழகியது சேவையன் ! தீவுகளைச் சேர்ந்த ஒபஹு. நகரங்களில் சிறந்தது ஷானலூலு. நாடுகளில் சிறந்தது இத்தலி. துறைமுகத்தில் சிறந்தது ஹாங்காங். காட்சியில் சிறந்தது ஹானலூலுவை அடுத்துள்ள பாலி. உல்லாச யாத்திரைக்கு உகந்தது ரிபல்ஸ்வளைகுடாவும் ஹாங்காங்தீவிலுள்ள ஹாங்காங் சிகரமும். வீதிகளில் சிறந்தது ஜப்பானிலுள்ள நிக்காத்தின் கிரிப்டோமரியா வீதி. கட்டடங்களில் சிறந்தது இந்தியாவில் ஆக்ராவிலுள்ள தாஜ் மகால். கோயில்களில் சிறந்தது ஜப்பான் தேசத்தில் நிக்கோ நகரத்திலுள்ள ஐயயாசு. ஹோட்டல்களில் சிறந்தது ஷாங்கையிலுள்ள மெஜஸ்டிக் ஒட்டல். மலைகளில் அழகியது ஜப்பானிலுள்ள ப்யூஜியாமா. நதிகளில் சிறந்தது எகிப்திலுள்ள நீல நதி. உலகத்திலுள்ள பெண்களின் சிறந்த அழகுள்ளவர்கள் சிங்களப் பெண்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

1001-இலை அதிசயம்!

திருவாங்கூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த வைக்கம் என்னும் சிவ க்ஷேத்திரத்தில் தினந்தோறும் ஓராயிரம் ஜனங்களுக்கு ஆலயத்தில் அன்ன மிடுகிறார்கள். சாப்பாட்டுக்காக ஜனங்கள் சாரி சாரியாகக் கோவிலுக்குட் புகும்போது முகத்துவாரத்தில் காவலாளர் நின்று விழிப்புற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனங்களை எண்ணி ஒவ்வொருவராக உள்ளே விடுகிறார்கள். ஒவ்வொருவரும் உண்பதற்கு ஒரு பெரிய வாழையிலையைக் கொடுக்கிறார்கள். இலைகளைப் பங்கிடு முன் அவைகளை எண்ணி ஏற்றக் குறைவில்லாமல் சரியாக ஓராயிரம் கணக்கிட்டு வைக்கிறார்கள். ஓ ராயிர மான வுடனே, ஓ ராயிரத்தவன் கடைசியாக உட்புகுந்தவுடனே கோவிற் கதவுகளைச் சாத்தி விடுகிறார்கள். ஆயிரம் ஜனங்களும் வித்தியாசம் பாராட்டாமல் சமமாக உட்கார்ந்த பின்பு அவர்களை மறுபடி எண்ணிப் பார்க்கிறார்கள்.

விநோதக் குறிப்புகள்

ஆயிரம் ஜனங்களுக்கு அன்னம் பரிமாறுகிறார்கள். அவர்கள் உண வருந்தி வெளியேறுகையில் அவ்வோராயிரவரைத் திரும்ப எண்ணிப் பார்க்கிறார்கள். ஆனால், அன்னமுண்ட இலைகளை மறுபடி எண்ணிப் பார்க்கும்போது ஓர் இலை அதிகமாயிருக்கின்றது. மொத்தம் ஆயிரத் தோர் இலைகள் கணக்காகின்றன. இது பெரிய அதிசயமா யிருக் கின்றது. ஆயிரத்தோராம் இலை எப்படி வந்தது? அவ்வாயிரத் தோராவான் யாவன்? இவ்வற்புதத்தை நாஸ்திகர், பௌதிக சாஸ் திரிகள், ஜாலவித்தை வல்ல மாயாவிகள் முதலான பற்பலரும் காத் துப் பார்த்து எண்ணி ஆராய்ந்து ஆலோசித்து, இந்தச் சூதைக் கண்டு பிடிக்க இதுவரையில் பிரயத்தனப் பட்டார்கள். இது சூதானு லல் லவோ இவர்கள் கண்டுபிடிப்பதற்காகும்? இவ்வற்புதத்தின் கார ணத்தை எவருங் கண்டறிந்தா ரில்லை. வைக்கத்து அப்பனே ஆயிரத் தோராவது இலையில் சாப்பிடுவதாக ஐதீகம்

இயற்கை வாழ்வாம்!

ஐரோப்பாவில் ஸ்வித்ஜர்லாந்து நாட்டில் ஜூரிச் மாகாணத் திற் கருகிலுள்ள ராபர்ஸ்விப் என்னும் ஊரில் ஏடன் தோட்ட வாசி கள்' என்று சொல்லிக்கொண்டு ஒரு நூதன வகுப்பினர் புதிதாகக் கிளம்பி யிருக்கின்றனர். இந்த கோஷ்டியார் ஆதம் ஏவாள் ஆதி காலத்தில் வாழ்ந்த வண்ணம் தங்கள் வாழ் நாட்களைக் கழிப்பதே தகுதியுள்ளதென்று நம்புகிறார்கள். இந்தக் கூட்டத்தில் வெவ் வேறு தேசங்களின் பெண்கள் சிலர் வந்து சேர்ந்தார்கள். அச்சங் கத்தில் சைனியத்தினின்றும் விலகியுள்ள ஒரு தளகர்த்தரும் பெரிய வம்சத்தைச் சேர்ந்த ஒரு சீமாட்டியும் கூடச் சேர்ந்திருக்கின்றனர். அவர்களைக் கேட்டால், தங்களுக்கு இவ்வுலக வாழ்க்கையின் தற்கால தோரணைகளும் சம்பிரதாயங்களும் பிடிக்கவே யில்லை யென்று சொல் லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் ஒரே ஒரு குடுத்தா மாத்திரம் அணிந்துகொண்டிருக் கிறார்கள். இக்குடுத்தா முழங்கால் வரையில் தான் தொங்கும். ஆனால் தெய்வத்தைத் தொழக் கூடும்பொழுது இக் குடுத்தாவையும் களைந்து விடுகிறார்கள். இவ்விதப் பிரார்த் தனைக் கூட்டங்கள் வாரத்தில் ஒரு முறை கூடும். அவ்வூர் வாசிகள் யணியாது ஆண்களும் பெண்களும் பாடிக்கொண்டும் உலாவிக் கொண்டு மிருப்பதைக் கண்டு பிரமித்து இத்தகவலைப் போலீசாருக்

கறிவித்தார்கள். போலீசார் இக்கூட்டத்தாரை அக்கோலத்துடனே கைதுசெய்து, அவர்களிடமுள்ள குடுத்தாவை அணியச்செய்து போலீஸ் ஸ்டேஷனில் அவர்களுடைய பெயரைப் பதிவு செய்து கொண்டார்கள். இச்சங்கத்தார் தங்களுடைய விலாசம் "பூலோகம்" என்று சொல்லுகிறார்கள்!"

வானத்தில் கலியாணம்.

அமெரிக்காவில் டெட்ருய்ட் என்ற விடத்தில் பூமியிலிருந்து அரை மைல் உயரத்தில் ஆகாயத்தில் மிஸ்டர் ஹோவர்ட்யன் போட்டர் அவர்களுக்கும் மிஸ். கிளேடிஸ் மேக் பாக்ஸ்டர் அம்மாளுக்கும் கலியாணம் நடந்ததாம். பெண் ஒரு ஆகாய விமானத்திலும் மாப்பிள்ளை ஒரு ஆகாய விமானத்திலும் ஏறிக்கொண்டனர். சுமார் 3000 அடி உயரத்தில் பறந்து இரண்டு விமானங்களும் சமீபத்தில் கொண்டு வரப்பட்டன. உடனே பாதிரியார் கலியாணச் சடங்கு காலத்தில் வாசிக்கவேண்டியதை வாசித்தார். அப்பொழுது விமானங்களின் இன்சின்கள் நிறுத்தப்பட்டிருந்தன. எல்லாம் வாசித்து முடிந்தவுடன் அந்நாட்டு ஆசாரப்படி மோதிரம் மாற்றிக் கொண்டு புருஷனும் மனைவியும் ஒரே விமானத்தில் அமர்ந்து கீழே வந்து சேர்ந்தனர். மாப்பிள்ளைத் தோழனும், பெண் தோழியும், இதர குடும்பத்தவர்களும் கீழே நின்று கொண்டிருந்தனர். இவர்களும் விமானத்தில் செல்லுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆகாய விமானங்களை சமீபத்தில் கொண்டுவருவதற்குப் பரிசோதனை செய்யப்பட்ட போது ஒரு விமானம் கீழே விழுந்து விட்டது. அதிலிருந்த விமான ஓட்டி இறந்துபோனான். ஆகையால் இவர்கள் கீழே நிற்க நேரிட்டதாம்.

எண்பதில் இளமை.

பிரான்சு தேசத்தில் எண்பது வயதுள்ள ஒரு கிழவி யிருந்தாள். வயதைக்கொண்டு அவளைக் கிழவியென்று சொல்லலாமே யன்றி அவள் வடிவத்தைக்கொண்டு அம்மொழியால் அவளை அழைத்தால் தகாது. அவள் வடிவமும் இளங்குமரி வடிவமாகப் பொலிந்திருந்தது. அவளுக்குப் பிள்ளைக ளுண்டு. பேரப் பிள்ளைகளு முண்டு. ஒரு நாள் ஒரு பேரன், அவளை உற்று நோக்கி அவளைத் தன் விருப்பத்திற்கு இணங்குமாறு கேட்டான். அவளது கட்டழகு அவனைக்

காம முறச் செய்தது. அவள் வய தென்ன? இவன் வய தென்ன ? முறையிலோ அவள் பாட்டி ; இவன் பேரன். பேரன் மனத்தைத் தகாத வழியில் அவள் அழகு நடாத்தியதெனில், அவளது இளமை வளத்தை என்னென்று கூறுவது ? பேரன் விருப்பத்திற்குப் பாட்டி இணங்குவளோ ? அவள் மறுத்ததும் பேரன் நாண மேலிட்டால் தூக்கிட்டுக்கொண்டு இன்னுயிர் துறந்தான். எண்பது வயதுடைய ஒருத்தி இத்தகைய இளமை வாய்ந் திருந்ததற்குக் காரணமாக நின்றது எது? அவளது வீட்டுக்கு அணித்தாய் ஓடும் ஒரு சிற்றருவியில் நாடோறும் அவள் பன்முறை நீராடி வந்ததேயாகும். இதனை ஹாரி கேஸ் என்பவர் எழுதியிருக்கும் "என்றும் குமரன்" என்னும் நூலில் காண்கிறோம்.

பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்

கர்னல் ஜேம்ஸ் சர்ச் வோர்டு என்பவரும் பௌத்த அறிஞர்கள் சிலரும் சேர்ந்து இந்தியாவில் கண்டுபிடித்த பழைய சாசனங்களை அமெரிக்கா நியூயார்க்கில் மொழிபெயர்த்ததில் சில அதிசய விஷயங்கள் வெளியா யிருக்கின்றனவாம். பூமியில் மக்கள் முதல் முதல் தோன்றிய இடம் பசிபிக் சமுத்திரத்தில் மு என்ற பெயருடன் விளங்கிய கண்டமாம். வட அமெரிக்காவை விடப் பெரிதா யிருந்த அக்கண்டமும் அதில் வாழ்ந்திருந்த ஜனங்களும் அதில் விளங்கிய கோயில்களுடன் சேர்ந்த பெரு நகரங்களும் 13,000 ஆண்டுகளுக்கு முன் முழுகிப்போய் விட்டனராம். அந்தக் கண்டத்திலே வாழ்ந்தவர்கள் இப்பொழுதுள்ளவர்களை விடச் சிறந்த நாகரிக முள்ளவர்களா யிருந்தார்களாம். கி. மு. 10,000-ம் ஆண்டில் இந்தியாவில் சேனைகள் ஆகாயக் கப்பல்களில் பறந்து சென்றனவாம். இந்த ஆகாயக் கப்பல்கள் மிகவும் எளிய முறையில் இயற்கையின் துணையால் இயங்கிய யந்திரங்களால் பறந்தனவாம். ஸ்ரீ ராமச் சந்திரன் இலங்கையிலிருந்து வட இந்தியாவிலுள்ள அயோத்திக்கு இந்த ஆகாயக் கப்பலில்தான் சென்றாராம். அவர்கள் சதக்னி, சகஸ்திரக்னி என்ற வெடிகுண்டுகளையும் உபயோகித்தார்கள ம். வெடி மருந்தும் துப்பாக்கி முதலிய ஆயுதங்களும் அக்காலத்தில் உண்டாம்.

பத்திராதிபர் குறிப்புகள்

ஊழியன் :—

காரைக்குடியில் தோன்றி இது காறும் "தனவைசிய ஊழியன்" என்ற நாமத்துடன் உலாவி வந்த வாரப் பத்திரிகை, இப்பொழுது "ஊழியன்" என்ற பெயருடன் புத்துருப் பெற்று வெளிவந்திருக்கிறது. இதுவரை ஊழியன் தனவைசிய ஊழியனாக இருந்தான்— இனித் தமிழ் உலக ஊழியனாக இருப்பான். நமது ஊழியனுக்கு நல்வரவு கூறுகிறோம். இதன் ஆசிரியர் ஸ்ரீமான் ராய சொக்கலிங்கம் செட்டியாராவர். இவரைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமில்லை. காந்தி பிள்ளைத் தமிழ் பாடியவர் இவரே. "ஊழியன்" விரைவில் தினப் பதிப்பாகித் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம். வருட சந்தா ரூபாய் ஐந்தே.

* * * * *

ஈசனே! கேட்பாரில்லையா?

மலாய் நாட்டில் ஜோகூர் என்ற ஊரிலுள்ள ஒரு தோட்டத்தில் வயிற்றுப் பிழைப்புக்காக, மலையாளத்திலிருந்து சென்று கூலிவேலை செய்து வந்த ஒரு குடும்பத்தைச் சார்ந்த இரண்டு கலியாணமாகாத பெண்களை வெள்ளையர்களில் இருவர் மிருகத்தனமாயும், முரட்டுத்தனமாயும் கற்பழித்த கதையைப் பத்திரிகையில் படித்த ஒவ்வொரு தமிழனின் ரத்தமும் கொதியாமலிராது. நாகரீக நாட்டைச் சார்ந்த வெள்ளையர்கள் செய்யும் நாகரீகச் செயலா இது? இவர்களென்ன மிருகமா? அல்லது ராக்ஷசர்களா? நம் நாடு இன்று சுயேட்சையாயிருந்தால் இவர்கள் நம் நாரிகளின் கற்பை யழிக்க முன்வந்திருப்பார்களா? நம் நாட்டில் வேலையில்லாமல், வயிற்றுக் கொடுமைக்காக அயல் நாடு சென்றுதோட்டங்களில், ஏழைச் சகோதரர் சகோதரிகள், கூலிவேலை செய்யப் போகிறார்கள், அங்கே கேவலம், மிருகங்களை விடக் கேவலமாய் நடத்தப் படுகிறார்கள். அங்கு செல்லாமலிருக்க ஏதாவது வழி எப்பொழுதாவது ஏற்படுமா? ஈசனே, திக்கற்ற அனாதைகளுக்கு, நீயே துணை. காலஞ்சென்ற பாரதியார், பாடிய "பிஜீத்தீவு" என்ற பாட்டை மற்றொரு பகுதியில் பிரசுரித்திருக்கிறோம். பாரதியார் இவ்வுண்மையை முன்னரே அறிந்து கண்ணீர் விட்டிருக்கிறாரென்பதை நேயர்களுக்கு ஞாபகமூட்டுகிறோம்.

———

உ

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்.

இவை, பிழைபறப் பரிசோதிக்கப்பெற்று விலையுயர்ந்த கடிதத்தில் புதிய எழுத்துக்களில் செவ்விதாக அச்சிடப் பெற்றவை. கண்கவர் வனப்புமிக்க நேர்த்தியான கட்டட முடையவை. தமிழ்நூற் கருவூலத்திற்குத்தக்க அணிகலன்களாகத் திகழ்வன. இது வரை 56 தமிழ் நூல்கள் அழகிய முறையில் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளன.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் கலிக்கா கட்டடம்.	ரூ.	4	0
தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் உயர்ந்த கலிக்கா கட்டடம் முடையது	,,	3	8
நன்னூல் மூலம் (பாக்கட்) திருத்தமான பதிப்பு	,,	0	3
ஐந்திலக்கணம் பகுதி-க அழகிய கலிக்கா கட்டடம்	,,	0	12
திருக்குற மூலம் (பாக்கட், சாதாரணப் பதிப்பு) கண்கவர் வனப்பு மிளிர்வது. கைக் கணிகலனாகத் திகழ்வது	,,	0	8
நாலடியார் அரும்பொருள் விளக்கவுரை அருஞ்சொல்லகராதியுடன்	,,	1	0
களவழி நாற்பது பதவுரை விளக்கவுரையுடன்	,,	0	5
இன்னா நாற்பது பதவுரை விளக்கவுரையுடன்	,,	0	5
கார் நாற்பது உரையுடன்	,,	0	5
இனியவை நாற்பது பதவுரை, பழைய பொழிப்புரை, விளக்க வுரையுடன்	,,	0	5
திணைமொழி ஐம்பது பழையபொழிப்புரை, அருஞ்சொல் லகராதியுடன்	,,	0	5
சோமேசர் முதுமொழி வெண்பா மூலமும் உரையும் கலிகா கட்டடம்	,,	1	12
திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி (உரையுடன்) கலிக்கா கட்டடம்	,,	1	4
குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு அரும்பொருள் விளக்கத்துடன். அழகிய பதிப்பு	,,	3	8
மதுரைக்கலம்பகம் அரும்பொருள் விளக்கவுரையுளன்	,,	0	6
மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்	,,	0	6
நீதிநெறி விளக்கம்	,,	0	4
நளவெண்பா அருஞ்சொற் பொருள் விளக்கவுரையுடன்	,,	1	0
அறிவுரைத் திரட்டு (சிறந்த உரை நடைநூல்.)	,,	0	12
சிவகாருணிய ஒழுக்கம் மாணவர்க்குப் பெரிதும் பயன்படுவது		0	4
மனுமுறைகண்ட வாசகம் மாணவர்க்குகந்த உரை நடை நூல்	,,	0	8
திருவாதவூரர் புராணம் அருஞ் சொல்லகராதியுடன்	,,	0	8

விலாசம் :—

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,

306, லிங்கசெட்டி தெரு, சென்னை.

A

சிவஞான சித்தியர் சுபக்கம் இருவருரையுடன்	ரூ.	4	8
சித்தாந்தப் பிரகாசிகை (ஸ்ரீ சிவஞான சுவாமிகள்)	,,	0	3
ஞானாமிர்தக் கட்டளை (ஓர் அரிய பழை நூல்)	,,	0	4
பூப்பிள்ளை அட்டவணை (ஸ்ரீமத் அம்பலவாண சுவாமிகள்)	,,	0	2
சைவ சித்தாந்த வரலாறு (கா. சுப்பிரமணியபிள்ளை	,,	0	3
சைவ சித்தாந்த விளக்கச் சுருக்கம் ,,	,,	0	1
சிவ தத்துவ விவேகம் (சிவஞானசுவாமிகள்) உரையுடன்	,,	0	5
சுருதி சூக்திமாலையாகிய சதுர்வேததாற்பரிய சங்கிரகம் (சபாபதிநாவலர் மொழிபெயர்த் தியற்றியது) அரும்பொருள் விளக்கத்துடன்	,,	0	8
திருமுருகாற்றுப்படை (நக்கீரர் அருளியது)	,,	0	2
கந்தரலங்காரம் கந்தரனுபூதி (அருணகிரி நாதர்)	,,	0	3
கந்தரந்தாதி ,,	,,	0	2
திருவகுப்பு (25 வகுப்புக்கள்) ,,	,,	0	5
கந்தர் கலி வெண்பா (குமரகுருபரர்) குறிப்புரையுடன்	,,	0	2
திருத்தணிகை யாற்றுப்படை (கச்சியப்பமுனிவர்)	,,	0	2
கந்தர் சஷ்டி கவசம் (தேவராய சுவாமிகள்)	,,	0	1
திருச்செந்திற் கலம்பகம்	,,	0	5
திருவடிப்புகழ்மாலை மலர்-௧ (பாராயணத்திற்குரியது)	,,	0	3
ஷை ,, ௨ ,,	,,	0	3
ஷை ,, ௩ ,,	,,	0	2
திருவாசக மூலம் (பாக்கட், சாதாரண பதிப்பு)	,,	1	8
ஷை (உயர்ந்த பதிப்பு) விலையுயர்ந்த கடிதத்தில் ரெக்சின் (Rexin) துணியில் பஞ்சுவைத்துக் கண்ணைக்கவரும் வண்ணங் கட்டடஞ் செய்யபபட்டது	,,	3	0
அகத்தியர் தேவாரத்திரட்டு திரு. கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் இயற்றிய உரையுடன்	,,	1	12
திருப்புகழ்த் திரட்டு (அழகொழுகும் பதிப்பு)	,,	0	5
முருகன் புகழ்மாலை (பூசனைக் குரியது) இத்தகைய பதிப்பு தமிழுலகிற்குப் புதிதாகும் விலையுயர்ந்த செப்பமான கட்டட முடையது. 356 பக்கம்	,,	3	0

தருக்கம்.

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் பிரபந்தம் முதற்பாகம் (7 வசன நூல்கள்) கலிக்கா கட்டடம்	ரூ.	1	12
கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தவிருத்தி	,,	0	3
சிவசின்னங்க ளணிவதேன்?	,,	0	1
இந்து சமயங்களின் சுருக்கவரலாறு	,,	0	2½
மாதிருக்கும் பாதியன்	,,	0	1
சைவசமயவளர்ச்சி (அரு. சோமசுந்தரஞ் செட்டியார்)	,,	0	1

புத்தக விபரம் பாப்பட்டி இனும்.

விலாசம்:—

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,

306, லிங்கசெட்டி தெரு, சென்னை.

தீபாவளி! தீபாவளி!!

பாலாமணி பட்டுப் புடவை.

இந்தப் புடவை பார்ப்பவர் கண்களை விரைவில் கவரும் அழகு வாய்ந்தது புடவை எந்தக் கலரோ, அதே கலரில் உடலில் பட்டுப் பூக்கள் போட்டிருக்கும். ஜரிகக் கரையும் முகதலையுமுள்ளது.

12 மு x 44" விலை ரூ. 24, 30, 35 முதல் 60 வரை.
16 மு x 44" விலை ரூ. 30 முதல் 100 வரை.

பெரிய கொட்டடிப் புடவை.

நேர்த்தியான உடலில் தளதளப்பான ஜரிகைக் கொட்டடியும் ஜரிகை முகதலையுமுள்ளது.

12 மு x 44" விலை ரூ. 28 முதல் 40 வரை.

16 மு x 44" விலை ரூ. 35 முதல் 60 ஷை கொட்டடிக்குள் ஜரிகை புட்டா போட்டது. விலை ரூ. 95 முதல் வரை.

சிறிய கொட்டடிப் புடவை.

இப்புடவை முழுவதும், பெரிய கொட்டடியைப்போல் உடலில் மட்டும் விலைக்குத் தகுந்தாற் போல் ஜரிகைக் கொட்டடி நெருக்கிப் போட்டிருக்கும்.

12 மு x 44" ரூ. 35 முதல் 100 வரை.
16 மு x 44" ரூ. 44 முதல் 125 வரை.

கே. எஸ். முத்தையா கம்பெனி சில்க் அவுஸ்,
காசி.

கருப்பு டயல் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம்.



இதன் டயல் வெண்மையாக இல்லாமல் கருப்பாக இருப்பதினால் அதில் மணிகாட்டும் எண்கள் வெண்மையாக எழுதியிருப்பதாலும் மணி பார்க்கும்போது வெகுதெளிவாக தெரியும். இதில் இரவில் மணி கண்டுகொள்ள ரேடியத்தால் எண்கள் எழுதியிருப்பதாலும் முட்களிலும் நிறப்பியிருப்பதால் இரவிலும் மணிநன்றாய் தெரிந்து கொள்ளலாம்.

நெ. 8. விலை 1-க்கு தோல் பட்டையுடன் 6-12-0.

நெ. 9 ஷை அசல் வெள்ளி கருப்புடைல் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம் விலை ரூபா. 9.

CLYDON & CO.

Sowcarpet, Madras.

"அமிர்த நஸ்யம்"

என்னும் மகுடம் புனைந்த சுகாதார சுகந்த பரிமள மூக்குத்தூள், ஜலதோஷம் பீனிசம் ஒற்றைதலை நோய்,மண்டைக்குத்தல், கண்எரிச்சல், முதலிய உபத்திரவங்களை கண்டிப்பதுடன் சதா உபயோகித்து வருவதால் மேற்கண்ட நோய்களை சேரவிடாது. ஒரு சிட்டிகைதூளை எடுத்து காலணாசாதாப் பொடியில் கலந்து கொண்டால் எல்லாம் பரிமளிக்கும் எல்லாப் பொடிக் கடைகளிலும் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். புட்டி 1-க்கு அணா 0 4 0

N. V. ஷண்முகம் கம்பெனி,
தபால் பெட்டி 555, மதருஸ்.

பாக்கெட் லீவர் ரேடியம் கெடியாரம்.

இரவில் மணிபார்க்க இக்கெடியாரத்திற்கு விளக்கு வெளிச்சம் வேண்டியதில்லை, இதைப்பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள், சரியான டைம் காட்டக்கூடியது, கம்பீரமான பார்வையுள்ளது, உறுத்த சாமான்களால் செய்தது கவர்ன்மென்டு சண்டுக்குச்சரியானகாலம் காட்டகூடியது. நெ. 1 ரேடியம் வெள்ளைடைல் பாக்கெட் லீவர் கெடியாரம் ரூபா. 5-8.

நெ. 2. கருப்பு டைல் ரேடியம் பாக்கட்கெடியாரம் 6-8. நெ. 3. இதில் ரேடியம் இல்லாத சாதாகெடியாரம் ரூ. 5-8. The New York Watch Co.,

35 Nambulier Street, Madras.

டிக்—டாக்.

பெயர் பெற்றது. ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப் பட்டது. சுவற்றில் மாட்டக் கூடிய கடியாரம் மிக்க உயர்ந்தது காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக் கூடியது இது ஒன்றே விலை ரூபாய் 2-12.

5 வருடத் உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு கைகடியாரம் 11 கல்லிழைத்தது ரூ. 12-8.

பிரிட்ஜ் மூவ்மெண்ட்

3 வருட உத்திரவாத முள்ள, தங்க கில்ட் சையிலணியும் கடியாரம் விலை ரூ. 7.

உயர்ந்த "பீ" டைம் பீஸ் விலை ரூ. 2-4.

படுக்கறையின் அழகிய போட்டோக்கள் டஜன் விலை ரூ. 2-4.

Emarald Watch Co. P. T. Madras.

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது புதுமாதிரியாக இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக் கூடிய சுலபமான தமிழில் பிரசுரிக்கபட்டிருக்கிறது. இவ் விஷயத்தை யாவரும் கவனித்து எழுதுங்கள். உடனே எழுதுங்கள்.

ஆங்கில ஆசான்

அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இது நான்காம் பதிப்பு 450 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும், எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப் பட்டிருக்கின்றது. மாதகளுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், மிகவும் முக்கியமானது.

இப்புத்தகம் 1க்கு விலை ரூ. 2. தபால் செலவு அணா. 6.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 259, தங்கசாலை தெருவு,
மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

சுத்தமான கதர் வேஷ்டிகள்

அழகான கரைகள் போட்டது

4 முழ × 52" ஜோடி 1-க்கு ரூ. 3-2
$4\frac{1}{2}$ முழ × 52" ஜோடி 1-க்கு ரூ. 3-8
5 முழ × 52" ஜோடி 1-க்கு ரூ. 4.

கே. எஸ். முத்தையா அண்டு கோ.,
தபால் பெட்டி 99, சென்னை.

குடும்பாஞ்சனம்

எல்லாவிதமான
நோவுகளுக்கும்,
வலிகளுக்கும்
அவசியமான
மருந்து.

புட்டி 1-க்கு விலை அணா .

எஜென்டுகள் தேவை.

கியாட்லாக் இனாம்.

Kudumbanjan Depo. Park Town, Madras.

TALISMANS AND CHARMS.

For those People to Avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life.

	Rs.	A.
For Honour, Riches, Learning and Greatness	7	8
For Health, Physical Strength, etc.	7	8
For Power of Eloquence, Speeches, etc.	7	8
For success in any Undertaking or Litigation, etc.	10	0
For Success in Sport, Racing, Cards, Games of Chance etc.	7	8
For Success in Spiritual and Religious Life.	10	0
For Success in Trade and Business	10	0
For Men's Love to Women	7	8
For Women's Love to Men	10	0
For Love of Opposite Sex, Attractive Power	7	8
For Agricultural Prosperity, Farming, Good Crops, etc.	7	8
For Success in Minning Plumbago, etc.	100	0
For Success in Gemming	225	0
Rabbi Solomon's Special Talisman for every success	15	0
Specially valued and worn by every successful Hebrew, 2nd quality	21	0
1st quality	30	0

NOTE.—A money Order or G. C. Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs. 15, to Rs. 25 three Rs. 30 or more at a time at Rs. 10 per reading. Remit with birth date. Always the full amount should be remitted in advance. No V. P. P.

Apply to :—**RAM DUTH. Astrologer.**

No 30 & 55 (L). Cheku Street, Colombo. (Ceylon).

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்:—வெஸ்ட் அண்டு கோ.,

மவுண்ட் ரோட் : : சென்னை.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை யெடுத்து காலணு மூக்குத்தூளு டன் கலந்தால் அதிகயின்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத் துக்கு மேற்பட்ட 96-வியாதிகளை கண்டிக்கும். இந்ததூள் எக்காலமும் கெடாது. எந்த கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ.எஸ். மார்க்கை கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 டிஷ டஜன் 1-க்கு ரூ 2-4 டிஷ சேர் 1-க்கு ரூ 3.

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1க்கு அணு 3டிஷ டஜன் 1-க்கு ரூ 2 டிஷ சேர் 1-க்கு ரூ 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதரூஸ்

நமது புதிய பிரசுரங்கள்.

துயில்மொழி :—ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு இதைவிட மனவெழுச்சியைக் கொடுக்கக் கூடிய கதை இல்லவே இல்லை. விலை அணு 2.

எனது காங்கிரஸ் யாத்திரை :—இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோரெல்லாம் அவசியம் படித்தரியவேண்டிய நூல். தற்காலத் தேசாபிமானிகளின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டுவது. அழகிய நடை. விலை அணு 3.

லக்ஷ்மி தாலாட்டுக் கோவை :—நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமிழ் நாட்டுத் தாய்மாருக்கு ஏற்றது. விலை அணு 3.

பழமொழித் திரட்டு :—பண்டைக்காலந் தொட்டே தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளில் சிறந்தவைகளை ஒன்ருகத் திரட்டி அச்சிடப் பெற்றது. விலை அணு 3.

நடராஜப் பத்து :—நடராஜப் பத்து, நடராஜர் பதிகப் பஞ்சகம், தில்லை நடராஜர் பதிகம், இம் மூன்றும் ஒரே புத்தகத்தில் சந்தி பிரித்து கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிடப் பட்டது விலை அணு 2.

கந்தாலங்காரம் :—இதில் கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், சத்ருசங்கார வேற்பதிகம் அகத்தியப் பஞ்சகம் முதலியவைகள் அடங்கி இருக்கிறது. கிளேஸ் கடிதம் விலை அணு 4.

பாய்பரமானந்தன்:—தேச பக்தியைப் புகட்டும் ஓர் சிறந்த நவீனம். புஸ்கத்தை கையில் எடுத்தால் முடிக்காமல் கீழேவைக்க மனம் வராது. 250 பக்கம் விலை ரூ. 1.

பாணபுரத்து வீரன்:—இவ்வழகிய நூலில் பாணபுரத்தார் தங்கள் தங்கள் உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் துறந்து தேசத்தின் விடுதலை பெறச் செய்த வீரச்செயலும், தேசபக்தியும் அவர்கள் மேன்மையை அழகாக விளக்கப்பட்டு இருக்கிறது. விலை ரூ. 1.

மதிழகி :— இனியதேனெழுகும் துப்பறியும் நாவல். விலை அணு8.

ஜே. ஆர். ரேங்க ராஜு அவர்கள் இயற்றிய
துப்பறியும் நாவல்கள்.

இராஜாம்பாள்	0 12	சந்திரகாந்தா	0 12
ஆனந்த கிஷ்ணன்	0 12	இராஜேந்திரன்	1 0
மோஹன சுந்தரம்	0 12		

கண்ணகியின் சாபம் :—ஸ்ரீமான் P. S. முருகேச முதலியார் அவர்கள் இயற்றியது. விலை அணு 10.

லக்ஷ்மி புத்தகசாலை,
தபால் பெட்டி 99 சென்னை.

புதிய இனிய தமிழ்ப் புத்தகங்கள்.

ஸ்ரீமஹா ஸ்காந்த புராண வசனம்.

அகண்டபரி பூரண சச்சிதாநந்த ஸ்வரூபராகிய பகவான் ஸ்ரீ ஷண்முகனது வைபவத்தை வெளியிடும் பெருமை வாய்ந்த இந்நூல், ஸ்ரீ வேதவ்வியாஸரால் வடமொழியில் இயற்றப்பட்ட மஹா ஸ்காந்த புராணத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். கற்றோரும் மற்றோரும் எளிதில் படித்துணரும் வண்ணம் சிறந்த வடமொழிப் பண்டிதரின் உதவியைக் கொண்டு, சிறந்த தமிழ்ப் புலவரால் எளிய தமிழ் நடையில் இயற்றப்பட்டுள்ளது. புத்திரபாக்கியத்தை யடைய விரும்பினோர்க்குப் புத்திரபாக்கியத்தையும், செல்வத்தை விரும்பினோர்க்குச் செல்வத்தையும், கல்வியை வேண்டினோர்க்குக் கல்வியையும், நோயற்ற வாழ்வை விரும்பினோர்க்கு நோயற்ற வாழ்வையும்,மோக்ஷத்தை விரும்பினோர்க்கு மோக்ஷத்தையும் கொடுக்கவல்லது. பாராயணத்திக்கு மிக்க அவசியமானது. இதுவரையில் தமிழில் வெளிவராதது. குறைந்த காப்பிகளே அச்சிடப்பட்டுள்ளன வாதலால் முந்தியே ஆர்டர் செய்து பெற்றுக்கொள்ளல் நலம்.

புத்தகத்தின் விலை ரூபா 5.

தபால் சார்ஜ் உள்பட ஒரு புத்தகத்தின் விலை ரூபா 6.

மஹிஷாசுரவதம்	0	7
சும்ப நிசும்பர் வதம்	0	7
சரித்திர சந்திரிகை	0	12
மாருதி விஜயம்	0	12
புத்தகம்	0	1
பிதுர்வாக்கிய பரிபாலனம்	0	4
அரிச்சந்திரன்	0	10
ஹைமாவதி	0	4
உத்தரன்	0	3
தங்கக்கொடி	0	3
சாவித்திரி	0	8
பழமொழி நீதிக்கதைகள்	0	8
திருக்குறள் நீதிக்கதைகள் முதற்பாகம்	0	8
ஷை இரண்டாம் பாகம்	0	12
கமலேசன்	0	12
லக்ஷிமி	0	8
ஸூக்ஷ்மதரிசி	0	4
பத்நிமதி	0	10
சந்திராநனா	0	5
குணலாபன் அல்லது பட்டறிந்தவன்	0	7
தேவராஜு	0	6
நவராத்திரி பிரசங்கங்கள்	0	5

ஆராய்ந்தெடுத்த ஐந்நூறு பழமொழிகளும் அவற்றிற்கேற்ற ஆங்கில பழமொழிகளும் 2 அணு 6 பை.

மனோரஞ்சிதமணி	0	10
புவனசுந்தரி	0	4
"ஜீவகாந்தாமணி"	0	8
ஸத்தய சீலன்	0	10
கமலரேகை	0	12
பதிவிரதா லங்காரம்	0	3
மணிப்ரவாகன் கதை	0	6
கிராம வாழ்க்கை	1	0
ஐதர்-அலி	0	12
பதிவிரதைகள் சரித்திரம்	0	8
மிருகாவதி	1	4
கிருஷ்ண விஜயம்	1	0
லீலாதரன்	0	12
ஹிந்துமதஉபாக்கியானம் இரண்டாம்பாகம்	0	12
"வீணன்"	0	10
கோதண்ட விஜயம்	0	14
இராமநாதன்முதற்பாகம்	1	4
ஷை இரண்டாம்பாகம்	1	8

ஆர். வெங்டாசலம் அண்டு கோ.,

புக் ஸெல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,

1-63-ஏ பெரியதெருவு திருவல்லிக்கேணி, மதராஸ்

ஷண்முகம் பொடி.

80-வருஷ காலமாய்ப் பிரசித்தி பெற்றது.

இந்தியாவில் ஏராளமாய் விற்பனையாகி வருகின்றது.

ஷண்முகம் பொடியானது குணத்தில் உயர்ந்ததாயும் மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயும் இருந்து நல்ல பெயர் பெற்றிருக்கிறது. 80-வருஷத்திற்கு மேலாக வியாபாரத்தை நடத்தி இந்தியா, பர்மா, சிலோன், தென் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் பெரிய பெரிய ஜமீன்தார்கள் மிராசுதார் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் மற்றவர்களுக்கும் சப்ளை செய்து வருகிறோம். அதனால் எங்களுடைய பெயர் எங்கும் சாதாரணவீட்டு வார்த்தையாயிருக்கிறது. இந்தத் தொழிலில் எங்களுக்கு அதிக பழக்கம் இருப்பதாலும் அதைத் தயாரிக்கும் சரியான பக்குவம் எங்களுக்குத் தான் தெரியுமாகையால் நாங்கள் எங்கும் ஏராளமான விற்பனை செய்து வருகிறோம். ஒவ்வொரு போஸ்டிலும் நற்சாட்சி பத்திரம் வருகிறது.

அசல் ஷண்முகம் பட்டணம் பொடியின் விலை ஜாபிதா.

பலம்.	விலை.	போஸ்ட்.	பாக்கிங்.	மொத்தம்.
2	0-4.	4.		0-8.
4	0-8.	4.	1.	0-13.
5	0-10.	4.	1.	0-15.
8	1-0.	5.	1.	1-6.
10	1-4.	5.	1.	1-10.
16	2-0.	8.	2.	2-10.
20	1-12.	8.	2.	2-6.
26	2-5.	11.	2.	3-2.
40	3-8.	14.	3.	4-9.

ரைல்வே பார்ஸல் (ரெயில் சார்ஜ் பிரத்தியேகம்.)

40	3-8.	3.	2.	3-13.
80	7-0.	3.	4.	7-7.
120	10-8.	3.	4.	10-15

ஆர். கெ. பரிமள மூக்குத்தூள்.

1புட்டி	0-4.	4.	1.	0-9.
3புட்டி	0-9.	4.	1.	0-14.
12 ,,	2-4.	8.	1.	2-13.

(சாதாரண பொடியோடு ஆர். கெ. பரிமளபொடி சேர்க்கவேணும்)

இரண்டாந்தரம் ஷண்முகம் போடி.

வீசை 1-க்கு ரூ. 3. பாகிங்கு போஸ்டேஜ வேறு.
வீசை 1-க்கு ரூ. 4. ஸ்பெஷல் பொடி.

மரத்து பொடிடப்பி 1-க்கு அணா. 3. டஜன் ரூ. 2.
சந்தன மரத்து பொடிடப்பி அணா. 4. டஜன் ரூ. 2-12.
ஜர்மனி அட்டையிலே செய்த கருப்புடப்பி அ. 2. டஜன் ரூ. 1-8.
நேர்த்தியான தந்த டப்பி 1-க்கு விலை ரூ. 1. டஜன் ரூ. 11-8.
மகோர கொட்டை 1-க்கு அணா. 1. டஜன் அணா. 10.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்ட் பாக்ஸ் 140 (ல) மதராஸ்.

நாவல் பிரியர்களே உங்களுக்கோர் நல்ல சமாசாரம்!

வரப் போகிறது ஆவலுடன் எதிர் பாருங்கள்!!

ச ரோ ஜ னி

காதல் ரசம் ததும்பிய ஓர் அதியற்புதமான துப்பறியும் நாவல்

அழகமைந்த 10-சித்திரப்படங்கள் அடங்கியது

விலை ரூபா இரண்டு.

இந்த நாவல் தமிழ் உலகெங்கும் நாவல் எழுதுவதில் பிரசித்திப் பெற்றப்பிரபல நாவலாசிரியரான எஸ். எஸ். அருணகிரி நாதர் இயற்றியது. அவர் இதுவரைக்கும் எழுதிய எல்லா நாவல்களையும்விட இந்த நாவலை மிகவும் அற்புதமாய் அலங்காரமான நடையில் எழுதியிருக்கிறார். நாவல் வல்லோர் பலர் வெளியிட்டுள்ள பல்லாயிரம் நாவலுள் இந்நாவல் நடு நாயகமென உரைக்கத்தக்கச் சிறப்புவாய்ந்துள்ளது. புஸ்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டால் வேறெவ்விதமான அவசரவேலைகளிருப்பினும் அவைகளை மறந்து இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படி செய்யுமென்பது நிச்சயம். இன்னும் இந்த நாவலின் எந்தப் பக்கம் உற்றாலும் தொட்டாலும் பார்த்தாலும் வாசித்தாலும் வாசிக்கக் கேட்டாலும் காந்தங்கண்ட இரும்பு போல் மனதைவிட்டு இன்பம் அகலாதென்பது திண்ணம். அழகே ஓர் உருவெடுத்தாற்போல் இதில் அமைந்திருக்கும் பத்துச் சித்திரப்படங்களின் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாலும் ஆவல் அடங்காது, இவ்வளவு அழகமைந்த படங்களைப்போல் வேறு எந்த நாவலிலும் இதுவரைக்கும் வேறுபடங்கள் வெளிவந்தது கிடையாது. இந்தப் படங்களெல்லாம் பெங்கால் நகரத்திலிருந்து வந்துள்ள ஒரு பிரபல சித்திரக்காரரைக் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் இதைப்பற்றி அதிகமாய்ப் புகழாமல் ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், இது இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக உருசிப்பது இந்த நாவல்தான்.

இப்படிப்பட்ட மனோரம்மியமான உன்னத நாவல், 1925 வருஷம் ஆகஸ்டுமாதம் கடைசியில் வெளிவரும். இப்பொழுதே கீழ்கண்ட விலாசத்திற்கு ஒரு கடிதம் எழுதித் தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுகிறவர்களுக்கு தபாற்செலவு இனாம்.

எம். எஸ். ராமுலு, இராயபுரம்,

64, மன்னார்சாமி கோயில் வீதி, (ல)

மதராஸ்.

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்ய ஔஷதம்!
உ-மணி நேரத்தில் அபூர்வ குணம்!!

காமபந்து

இந்த மருந்தை இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீர்யம் எவ்வளவு நீற்றுப்போயிருந்தாலும் அதைக் கெட்டிப் படுத்தும் மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும். இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் திரப்பியா சத்தினாலுண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும் ஒரு முறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும். ரகஸியமாய் வைக்கப்படும்.

20 மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை ரூ. 2.
வி. பி. தபால் சார்ஜ் வேறு. 60 மாத்திரை விலை ரூ. 5

டி. பூஷண வைத்தியசாலை,
7, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு, மதராஸ்.

PARIS LADIES COLOURED PHOTOES.

பாரீஸ் லேடிகளின் அழகிய கலர் போட்டோ படங்கள்.

பார்ப்பவர்களுடைய மனதை பிரமிக்கச் செய்து இருதரத் தாருக்கும் ஆனந்தத்தைக்கொடுக்கும். இதில் விநோதமான போட்டோ படங்கள் பலவித நிறங்களோடு வெகு அழகாயிருக்கின்றன. இந்த போட்டோக்களை பெட்ரூம்களில் வைத்தால் வெகு சுந்தரமாயிருக்கும் ஒவ்வொரு போட்டோக்களின் ரகஸ்யத்தை இதில் எழுத முடியாதென சுருக்கிவிட்டோம்.

12 ரகம் கொண்ட செட் (டஜன்) 1-க்கு ரூபா 2-4.

புருஷ கம்பீரதாதுபுஷ்டி லேகியம்.

இந்தலேகியத்தில் கெச்சைச்காய்பிரமாணம் காலை மாலை 10-நாள் சாப்பிட்டால் தாதுக்ஷீணம், துரிதஸ்கலிதம், இவற்றைப்போக்கி இடுப்புக்கு வலிவையும் வீரியவிர்த்தியும் உண்டாக்கி, போகப்பிரியமும், கோசநரம்புகளுக்கு அதிக வலிவையும் தந்து கிழவனையும் வாலிபனாக்கி இகபோக சுகத்தை அனுபவிக்கக் செய்யும் குணத்திற்கு உத்திரவாதம்.

20-நாள் சாப்பிடச்கூடிய ½-சேர் டப்பி லேச்கியம் விலை ரூ. 2.
40-நாள் 1-சேர்லேகியம் ரூ. 3. வி. பி. சார்ஜ் அணா 7 வேறு.

The City Novelty Stores **Post Box No. 1155,**
Wash'pet P. O. Madras.

தமிழ்நா
2/351

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கயானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1 நெ.	விலை	ரூ. 11	முதல்	15	வரை.
2 ,,	,,	10	,,	11	,,
3 ,,	,,	8½	,,	10	,,

கம்பளிச் சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. கோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½.
உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடிதாவளி.

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு	அக. ரூ.	2
6 ,,	24	,,	,,	2½
7 ,,	29	,,	,,	3
8 ,,	40	,,	,,	5½
10 முழம்	40	இஞ்சு	அக. ரூ.	7
16 ,,	40	,,	,,	12
18 ,,	40	,,	,,	14

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ் - - காசி.